விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 08 வெள்ளிக்கிழமை (21.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## அபிவிருத்திக்கு இடையூறு
## வனவளத் திணைக்களம் மீது அரச அதிபர் குற்றச்சாட்டு

(பரந்தன்)

கிளிநொச்சி வனவளத்திணைக்களம் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இடையூறாக செயற்படுவதாக மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வனவளத் திணைக்களத்தின் மாவட்ட பொறுப்பதிகாரியையும் கடிந்து கொண்டுள்ளார். 24

## சுயநலத்துடன் எம்முள் சிலர் சதிகாரர்கள்!
## முதலமைச்சர்

(பனிக்கன்குளம்)

எமக்குள் சிலர் சுயநல சிந்தனையுடன் சதி வேலைகளில் ஈடுபடுவது முழுத் தமிழ் சமுதாயத்தையும் அழித்து விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது என வடமாகாண 23

## 6 கிலோ கஞ்சா மீட்பு




24



பண்டாரவன்னியனின் உருவச்சிலை

## காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில்
# வாயை திறந்தால் அரசுக்கு சிக்கல்!
## அதனால்தான் மௌனம் - சி.வி



(பனிக்கன்குளம்)

காணாமலாக்கப்பட்டவர்களை நாங்கள் பிடித்தோம், கொன்றோம் அல்லது இந்த இடத்தில் வைத்திருக்கிறோம் என்று படையினரோ அரசாங்கமோ கூறினால் பாரதூரமான குற்றம் நடந்தேறியமை உறுதியாகும். அதனால் குற்றமிழைத்தவர்களுக்கு என்ன நடக்கும் என்பதும் தெரியும். இந்நிலையிலேயே அரசாங்கம் இவ்விடயத்தில் பதில்கூறாது இருக்கிறது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம்...)

## வெடிகுண்டு ஒன்று நேற்று மீட்பு!

(கைதடி)

சாவகச்சேரி - கைதடி நுணாவில் ஏ-9 வீதியை அண்டியுள்ள குடியிருப்புக்கு அருகில் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று காலை குடியிருப்பாளர் தனது காணியைத் துப்புரவு செய்தபோது குண்டு காணப்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திரு 23

## ரயில் மோதி குடும்பஸ்தர் பலி



(மல்லாவி)

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் உள்ள புகையிரதக் கடவையின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பண்டாரிக் 23

## 74 இலங். அகதிகள் தாயகம் திரும்புவர்

(கொழும்பு)

இந்திய முகாம்களில் புகலிடக் கோரிக்கையாளர்களாக இருந்த 74 இலங்கை அகதிகள் இந்த மாதம் நாடு திரும்பவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது. 23

## 3 மாதத்துக்குள் மீள்குடியேற்றம் வடக்கில் பூர்த்தி



(கொழும்பு)

வடக்கில் எதிர்வரும் 03 மாத காலப்பகுதிக்குள் எஞ்சியுள்ள மக்களை மீள்குடியேற்றுவத 23

## சிறைக் கைதி ஒருவர் சாவு

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயி 23

## பண்டாரவன்னியனின் வாழ்க்கை நூலாக வெளியிடப்பட வேண்டும்
## வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பண்டாரவன்னியனின் வாழ்க்கை வரலாறு உத்தியோகபூர்வமாக எழுதப்பட்டு நூலாக வெளியிடப்பட வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் அமைக்கப் பெற்ற மாவீரன் குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியனின் உருவச்சிலை திறப்பு விழா நேற்றைய தினம் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை 24

## கழிவகற்றல் தொடர்பில் அறிவித்தல்

(கொழும்பு)

அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலும் கழிவகற்றல் சேவையை 02

## ரி.ஐ.டியினர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு வடக்கு கிழக்கில் நடத்தப்படுகின்ற உதைபந்தா 23

## ஆதிகால மனிதனின் பற்கள் மீட்பு

(கொழும்பு)

பலாங்கொடை பகுதியிலுள்ள குகை ஒன்றிலிருந்து 5500 வருடங்கள் பழமையான 23

## 51 ஆவது நாளாக நேற்றும் கேப்பாப்பிலவு போராட்டம்;
## முதலமைச்சர் சந்திப்பு



(பனிக்கன்குளம்)

இராணுவத்தினர் வசமுள்ள கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரி 23

## வாகனம் மோதி குழந்தை மரணம்

(நிந்தவூர்)

மட்டக்களப்பு நிந்தவூர் பகுதியில் பேக்கரி பொருட்களை விற்பனை செய்து வரும் வாகனம் ஒன்றினால் 24

## கடும் வெப்பமான காலநிலை
## உடல் பாதிப்பை தவிர்க்க உணவு, நீரில் கவனம் தேவை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அதிகரித்துள்ள வெப்பத்தால் உடலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை போஷாக்கான உணவு மற்றும் போதியளவான நீரை உடலுக்கு எடுத்துக் கொள்வதால் தவிர்த்துக்கொள்ள முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

தற்போது அதிகரித்துள்ள வெப்பநிலையின் தாக்கங்கள் தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட்டுவாகல் நில மீட்பு; போராட்டம் தொடர்வு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பிரதேசத்தில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள கவனயீர்ப்பு போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட குறித்த பகுதி முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்டதாகும்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தை தொடர்ந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி குறித்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வட்டுவாகல் பிரதேசத்தில் 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமும் முள்ளிவாய்க்கால் கிழக்கில் 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமும் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

எனினும் 37 குடும்பங்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்த நிலையில் அக்காணிகளை விடுவிக்கக் கோரி பல்வேறு போராட்டங்களை மக்கள் முன்னெடுத்த போதும் இதுவரை தீர்வு முன்வைக்கப்படாத நிலையில் நேற்றுமுன்தினம் தொடக்கம் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

## பெண்கள், சிறுவர்களை பாதுகாத்து சமூகத்துடன் மீளிணைக்கும் செயற்றிட்ட நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வன்முறைகளில் பாதிக்கப்படுகின்ற பெண்கள், சிறுவர்களை பாதுகாத்து சமூகத்துடன் மீளிணைக்கும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.சமூக செயற்பாட்டின் மைய நிறுவனத்தின் நம்பிக்கை இல்லத்துடன் பெண்கள் சிறுவர்கள் விவகார அமைச்சு இணைந்தே இச் செயற்றிட்டத்தினை இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் ஆரம்பித்து வைக்கவுள்ளது.

யாழ்.சமூக செயற்பாட்டு மைய நிறுவனமானது கடந்த பத்து வருடங்களாக பெண்கள் சிறுவர் பாதுகாப்பு நலன் சார்ந்த செயற்பாடுகளை வடமாகாண ரீதியில் முன்னெடுத்து வருகின்றது.

இதன் முக்கிய செயற்பாடான தொடர்பாக நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற நம்பிக்கை இல்லமானது கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து வன்முறைகளினால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் சிறுவர்களுக்கான தற்காலிக புகலிடம் வழங்குகின்ற செயற்பாட்டுடன் அவர்களை பாதிப்பிலிருந்து வெளிக்கொணர்ந்து சமூகத்துடன் மீளிணைக்கின்ற செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் எதிர்காலத்தில் நம்பிக்கை இல்ல செயற்பாடுகளினை பெண்கள் சிறுவர்கள் விவகார அமைச்சுடன் இணைந்து மேற கொளவதற்கான திட்ட கலந்துரையாடல்களை கடந்த சில மாதங்களாக கொழும்பு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்று வந்தது.

இதற்கு அமைச்சும் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் இதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கின்ற ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெண்கள் சிறுவர் விவகார அமைச்சின்உதவிசெயலாளர்திருமதிஅசோகா அளவத்தை மற்றும் தற்போது நிதிப் பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்ற சுவிஸர்லாந்து பிரதி துணைத்தூதுவர், தேசிய நிகழ்ச்சி திட்ட அலுவலர் செல்வி துஷாந்தி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

## கழிவகற்றல்...

அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவு 12 மணியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவிற்கமைய ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய, எந்தவொரு உள்ளூராட்சி நிறுவனத்தினாலும் அமுல்படுத்தப்படும் மற்றும் இயக்கப்படும் கழிவகற்றல், சேகரித்தல், கொண்டுசெல்லல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல், வேறுபிரித்தல், அகற்றுதல் மற்றும் வீதிகளில் உள்ள கழிவுகள், வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மற்றும் அதற்கு சமமான கருமங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இந்த உத்தரவுடன் தொடர்புடையவையாகும்.

அத்துடன் அவை அத்தியாவசிய சேவைகளாக அந்த அறிவித்தல் மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய பின்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றது.

எவராவதொரு நபருக்கோ அல்லது சொத்துக்கோ வாய்மூலமாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ துன்புறுத்தல் ஏற்படுத்துவதன் மூலம் அதாவது அச்சுறுத்துதல், பலவந்தப்படுத்தல் அல்லது ஏதாவதொரு வகையில் அவமானப்படுத்துதல் அல்லது ஏனைய முறைகளில் அச்செயல்களில் ஈடுபடுவதனை தடுத்தல், தாமதப்படுத்துதல் அல்லது இடையூறு செய்ய முயற்சித்தல் குற்றமாகும். அத்துடன் இவ்வாறான செயற்பாடுகளுக்கான அழுத்தம் கொடுத்தல், மக்களை ஆத்திரமூட்டல், ஏனைய முறைகளில் தூண்டுதல் ஊடாக அவ்வாறான சேவைகளை இயக்கும் எவரையாவது இடையூறு செய்தல், தொழிலிலிருந்து விலகுமாறு அழுத்தம் கொடுத்தல் ஆகிய செயல்கள் சட்டவிரோதமானதாகும்.

மேலும், இவ்வாறான கருமங்களுக்காக தொழில் வாய்ப்பு வழங்குதல் அல்லது தொழிலைப் பொறுப்பேற்றலை தடுப்பதும் அவ்வாறான குற்றமாகும்.

இந்த செயற்பாடுகளுக்காக எவராவது உடல் ரீதியாகவோ வாய்மூலமோ அழுத்தம் கொடுத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்குறித்த செயல்களை மேற்கொண்ட, மேற்கொள்ளும் அல்லது மேற்கொண்டதாக சந்தேகிக்கக்கூடிய நியாயமான காரணங்கள் இருப்பின் எந்தவொரு பொலிஸ் அலுவலராலும் பிடியாணை இன்றி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான ஒருவரைக் கைது செய்யலாம்.

இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபட்டவர் நீதிவான் முன்னிலையிலான வழக்கு தீர்ப்பின் பின்னர் கடூழிய சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப் படலாம் என அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(செ-11)


அடையாளம்
கொள்கை ஆய்வுக்கான நிலையம்

**அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்**
**நிர்வாக உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரல்**

யாழ்ப்பாணத்தைத் தளமாகவும், எதிர்வரும் காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தனது செயல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவும் எண்ணியுள்ள, 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த **அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையமானது** தனது யாழ் காரியாலயத்தை நிர் வகிக்க முழுநேர நிர்வாக உத்தியோகத்தருக்கான விண்ணப்பங்களை கோருகின்றது.

நிர்வாக உத்தியோகத்தர்,

- நிறுவனத்தின் **நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரின் கீழ்** பணிபுரிவார்.
- நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை செவ்வனே, நேரத்திற்கு செய்து முடிக்கக் கூடியவராகவும்,
- தமிழ், ஆங்கில மொழிகளில் குறிப்பிடத்தக்களவு பரீட்சயம் பெற்றவராகவும்,
- அடிப்படை கணக்குப்பதிவியல், வரவு-செலவு கணக்கியல் அறிந்தவராகவும்,
- நிறுவனத்தின் அறிக்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யக்கூடியவராகவும் இருத்தல் அவசியம்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சமூகத்தினிடையேயும், செயற்பாட்டாளர்களிடையேயும் செயற்பட்ட, செயற்பட்டு வரும்/ தொடர்புகளை தொடர்ந்து பேணி வரும், அப்பிரதேசங்களின் சமூக - அரசியல் - பொருளாதார கள நிலவரங்களை நன்கறிந்த விண்ணப்பதாரிகளுக்கும் அலுவலக நிர்வாகத்தில் முன்னனுபவம் உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பக் கடிதங்களையும் இரு சான்றாளர்களின் பெயர்களுடனான தகைமைத்திரட்டு படிவத்தினையும் "நிர்வாக உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" அல்லது **Application for Administrative Officer** என்ற தலைப்புடன் **info@adayaalam.org** என்ற முகவரிக்கு **மே 05** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்**
**கொள்கை ஆய்வுக்கான நிலையம்**
**49, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.** (C-8220)

**அடையாளம்**
**20/04/2017**



**ஆற்றுமணல்**
**விற்பனைக்கு**

உழவு இயந்திரம் 0.7 குத்து 5 கீப் டாட்டா பிக்கப் 0.6 கீப் வடமராட்சி கிழக்கை தவிர்ந்த வடமராட்சிக்கு உட்பட்ட இடங்களுக்கு எமது பதிவு செய்யப்பட்ட வாகனத்தின் மூலம் விநியோகம் செய்யப்படும். அத்துடன் எம்மிடம் 4" கொங்கிறீற் கற்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- அ. சிறிகரன்
வெல்லன் கொன்ரக்சன், மத்தெனி, கரவெட்டி மேற்கு.
**T.P.NO. - 077 434 9105** (C-8218)



**விற்பனையாளர் தேவை**

தேசிய லொத்தர் சபையின் ரிக்கட்கள் விற்பனை செய்வதற்கு கீழ்வரும் இடங்களுக்கு விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் மற்றும் கொமிசன் வழங்கப்படும். மேலதிக சலுகையாக காப்புறுதி வசதி, ஓய்வூதிய கொடுப்பனவுக்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0775164928, 0212215777**

(காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கீரிமலை, சுன்னாகம், கொக்குவில், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, மானிப்பாய், சித்தன்கேணி, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை ஊர்காவற்றுறை) (8777)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**



**2ம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **செல்லத்தம்பி சுதர்சன்**

தோற்றம் 02.10.1973
மறைவு 13.05.2015

**திதி-தசமி 21.04.2017**

ஆண்டு இரண்டு மறைந்து விட்டது அப்பா
அகலுமா உங்கள் பிரிவின் துயரம்
மறையுமா உங்கள் நினைவு
காலங்கள் ஆயிரம் போனாலும் அப்பா
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்...

சுதர்சனம்,
அண்ணாசிலையடி,
குமாரியோடை, கரணவாய்.

என்றும் நினைவினில்
மனைவி, பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

(C-8150)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க ஜனாதிபதி தயார்

(கொழும்பு)

**தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் குறிப்பிட்டதைப் போன்று தனது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று ஊடகங்களினது உயரதிகாரிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்களின் போது தான் அளித்த வாக்குறுதிகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அந்த வாக்குறுதிகளில் மாற்றம் எதுவும் இல்லை என்றும், அவை அனைத்தும் கூறியபடியே நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அரச நிறுவனங்கள் சிலவற்றின் தலைமைப் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குறிப்பிட்ட சில நிறுவனங்களை மேலும் திறமையாகச் செயற்பட வைக்கும் நோக்கிலேயே இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

## நவீன தள்ளுவண்டி அறிமுகம்




(கொழும்பு)

அவசர சிகிச்சைக்காக நோயாளர்களை நேரடியாக வார்ட்டுக்கு அனுமதிப்பதற்காக, பெகி கார் அம்புலன்ஸ் சேவையொன்று, முதன் முறையாக அம்பாறை வைத்தியசலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஆலோசனையின் பேரில், இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்களைத் தள்ளுவண்டியில் (ட்ரொலி) வார்ட்டுக்கு அழைத்துச் செல்லும் போது வழங்கப்படும் பாதுகாப்பு வழிமுறைகள், இந்த பெகி கார் அம்புலன்ஸ் சேவையின் போது தேவைப்படாது என்று, அம்பாறை வைத்திய அதிகாரி டாக்டர் லங்கா திலக ஜயசிங்க தெரிவித்தார்.

அத்துடன், நோயாளர்களை மிகுந்த பாதுகாப்புடனும் வசதியுடனும் பெகி கார் அம்புலன்ஸில் வார்ட்டுக்கு அழைத்துச் செல்ல முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த பெகி கார் அம்புலன்ஸ் ஒன்று, சுமார் 2 மில்லியன் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இராணுவம் வசமுள்ள காணிகளை அரசு உடன் விடுவிக்க வேண்டும்

### வியாழேந்திரன் எம்.பி. வலியுறுத்து



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 20இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் வாழ்வாதார மற்றும் குடியிருப்புக் காணிகள் படையினரின் வசமுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

இதனை நல்லாட்சி அரசாங்கம் செவிமடுத்து, இராணுவம் மற்றும் பொலிஸார் வசமுள்ள பொதுமக்களின், காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்திற்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதார மற்றும் குடியிருப்பு நிலங்கள் தொடர்பான விபரங்கள் குறித்து நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கிலே தமது குடியிருப்பு மற்றும் வாழ்வாதாரக் காணிகளைக் கோரி, மக்கள் போராட்டம் நடத்தி வருவது தொடர்கதையாகி விட்டதாகக் குறிப்பிட்ட அவர், இதனை நல்லாட்சி அரசு செவிமடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சியைக் கொண்டு வருவதில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் இனவாதத்தையும் மதவாதத்தையும் விரும்பாத நல்ல மனம் கொண்ட சிங்கள மக்களும் பாடுபட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## பொட்டம்மானுக்கு தகவல் வழங்கிய இராணுவச் சிப்பாய் மலேசியாவில்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் புலனாய்வு பிரிவு பொறுப்பாளர் பொட்டம்மானுக்கு தகவல் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ சிப்பாய் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து, மீண்டும் மலேசியா நோக்கி சென்றுள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்வெளியிட்டுள்ளது.

பொட்டம்மானுக்கு தகவல் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ சிப்பாய் கப்டன் இந்திக்க சஞ்ஜீவ எனப்படும் சான் மொஹமட் யாழ். நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்

மலேசியாவில் மறைந்திருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது கப்டனின் வாக்குமூலத்தை யாழ்ப்பாண நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

விடுவிக்கப்பட்டதன் பின்னர் அவர் மீண்டும் மலேசியா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## வெசாக் தினத்துக்கான இலட்சினை வெளியீடு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் ஏற்பாட்டில், எதிர்வரும் மே மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேச வெசாக் தினத்துக்கான உத்தியோகபூர்வ இலட்சினை நேற்று வெளியிடப்பட்டது.

உலகின் நிரந்தர அமைதிக்கு பௌத்த தர்மோபதேசங்களின் வழிகாட்டல் என்பது இதன் கருப் பொருளாகும். உலகின் 85 நாடுகளின் பிரதிநிதிகள் மே மாதம் நடைபெறவுள்ள குறித்த கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுக்கத்தயார்

### அமைச்சர் கயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினத்திற்கு இலட்சக்கணக்கான மக்களை கொழும்புக்கு அழைத்து வருவோம்.

இம்முறை மே தின கூட்டம் தேர்தலுக்கான பலப்பரீட்சையாகும். எந்தவொரு தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கும் நாம் தயாராக உள்ளோம். கூட்டு எதிரணியினர் அலரி மாளிகையை முற்றுகையிடுவதாக கூறியுள்ளனர்.

முடியுமானால் அலரிமாளிகையை முற்றுகையிட்டு காண்பியுங்கள் என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக சவால் விடுத்தார்.

மே தின கூட்டம் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இரத்தினபுரியில் துப்பாக்கிச்சூடு

### இளைஞன் பலி

(இரத்தினபுரி)

இரத்தினபுரி, கிரிஎல்ல மாடுவாகல பகுதியில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 25 வயதான இளைஞர் ஒருவரே உயரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தனிப்பட்ட தகராறு ஒன்றின் காரணமாகவே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## கட்சிகளுக்கான பதிவு ஆரம்பம்



(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்காக விண்ணப்பித்திருந்த கட்சிகளுக்கான நேர்முகத்தேர்வுகள் நாளை முதல் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேர்முகத்தேர்வினூடாக அங்கீகரிக்கப்படும் அரசியல் கட்சிகள் தொடர்பான பட்டியலை விரைவில் வெளியிடுவதற்கும் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புதிய அரசியல் கட்சிகளை பதிவது தொடர்பில் ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே தேர்தல்கள் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## மீதொட்டமுல்ல அனர்த்தத்தின் குற்றவாளிகளுக்கு தண்டனை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பில் அறிக்கை ஒன்றை தயார் செய்வதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை நியமிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குற்றவாளியாக இனம் காணப்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும்ஜனாதிபதிதெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதம அதிகாரிகளை நேற்று முற்பகல் சந்தித்து கலந்துரையாடும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## கடற்றொழில் அபிவிருத்திக்கு வியட்நாம் உதவி

(கொழும்பு)

இலங்கை கடல் வள அபிவிருத்திக்காக வியட்நாம் தேவையான அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வியட்நாமிற்கான [illegible] இணைந்து கொண்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர, அந்த நாட்டு கடற்றொழில் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பிரதிபலனாகவே இந்த உதவித் திட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

வியட்நாம் நீரியல்வள தொழில் தொடர்பான கல்வி சுற்றுப் பயணத்திலும் அமைச்சர் மகிந்த அமரவீர பங்கு [illegible] தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்றுமதி மீன் வகையான பென்ஜியஸ் என்ற மீன் வகையை இலங்கையில் உற்பத்தி செய்கின்றமை குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மீன்வகையை ஏற்றுமதி செய்வதன் ஊடாக ஒரு கிலோகிராமிற்கு 3000 ரூபா கிடைப்பதுடன், இதற்காக பாரிய கேள்வி நிலவுகின்றது எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான அணிகள் அறிவிப்பு




இங்கிலாந்தில் ஜூன் 1ஆம் திகதி தொடங்கும் சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் ஜூன் 1ஆம் திகதி சம்பியன்ஸ் டிராபி 50 ஓவர் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இந்த தொடரில் பங்கேற்கும் 8 அணிகள் தற்போது வீரர்களை தேர்வு செய்து வருகிறது.

அவுஸ்திரேலியா 15 பேர் கொண்ட அணியை அறிவித்துள்ளது. அத்துடன் தென்னாபிரிக்கா அணியும் வீரர்களை அறிவித்துள்ளது. தோள்பட்டை காயம் காரணமாக டேல் ஸ்ரெயின் அணியில் இடம்பெறவில்லை. மோர்னி மோர்கல், மகாராஜ் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

தென்னாபிரிக்கா அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்.

ஏவி. டி வில்லியர்ஸ், ஹசிம் அம்லா, குயின்டான் டி கொக், டு பிளிசிஸ், டுமினி, டேவிட் மில்லர், பெஹார்டியன், கிறிஸ் மோரிஸ், பெலுக்வாயோ, ரபாடா, இம்ரான் தாஹிர், வெயின் ப்ரேடோரியஸ், கேஷவ் மகாராஜ், மோர்னி மோர்கல், வெயின் பர்னெல்.

8 அணிகளில் பங்களாதேஷும் ஒன்று. அந்த அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்.

தமீம் இக்பால், சவுமியா சர்கர், இம்ருல் கெய்ஸ், முஷ்பிகுர் ரஹிம் (விக்கெட் கீப்பர்), ஷகிப் அல் ஹசன், சபீர் ரஹ்மான், மெஹ்முதுல்லா, மொசாடெக் ஹொசைன், மோர்தசா (தலைவர்), முஷ்டாபிஜுர் ரஹ்மான், ருபெல் ஹொசைன், தஸ்கின் அஹமது, சன்சாமுல் இஸ்லாம், மெஹதி ஹசன், ஷபியுல் இஸ்லாம்.

இரண்டு முறை ஆஸ்திரேலிய அணி சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை கைப்பற்றியுள்ளது. 3-வது முறையாக அந்த அணி கோப்பையை கைப்பற்றும் எண்ணத்தில் உள்ளது.

இதற்கேற்ற வகையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் சம்பியன்ஸ் டிராபி கோப்பைக்கான 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியை அறிவித்துள்ளது. இந்திய டெஸ்ட் தொடரின்போது காயத்தால் விலகிய மிட்செல் ஸ்டார்க், ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகிய கிறிஸ்லின் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முன்னணி ஆல்ரவுண்டர் ஜேம்ஸ் பால்க்னெருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. அதேபோல் ஷேன் மார்ஷ், கவாஜா, பீட்டர் ஹேண்ட்ஸ்காம்ப், ஜோர்ஜ் பெய்லி போன்றோருக்கும் இடம் கிடைக்கவில்லை.



சம்பியன்ஸ் டிராபி கோப்பைக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம் வருமாறு.

ஸ்டீவன் ஸ்மித் (தலைவர்), வோர்னர், ஆரோன் பிஞ்ச், மேக்ஸ்வெல், மேத்யூ வேட், கிறிஸ்லின், ஹென்றிக்ஸ், கம்மின்ஸ், ஹாஸ்டிங்ஸ், ஹசில்வுட், டிராவிஸ் ஹெட், பேட்டின்சன், மிட்செல் ஸ்டார்க், ஸ்டோய்னிஸ், அடம் சம்பா. (க)

# சன்ரைசர்ஸ் அணியின் அனைத்து வீரர்களும் திறமையானவர்களே




## லக்ஷ்மன் கருத்து

சன்ரைசர்ஸ் அணியில் ஆடும் லெவனுக்கு வெளியே இருக்கும் ரிசேர்வ் வீரர்களும் சிறப்பான நிலையில் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று ஆலோசகர் லக்ஷ்மன் கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற டெல்லிக்கு எதிரான போட்டியில் ஹைதராபாத் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 191 ஓட்டங்கள் எடுத்தது. அதன்பின் துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 176 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

ஹைதராபாத் அணியில் நேற்று முன்தினம் போட்டியில்தான் முதன் முறையாக கேன் வில்லியம்சன் களம் இறங்கினார். அவர் 50 பந்தில் 89 ஓட்டங்கள் குவித்து முத்திரை பதித்தார். அதேபோல் அந்த அணியின் கவுல், சிராஜ் போன்ற பந்து வீச்சாளர்களும் சிறப்பான பந்து வீச்சை திறமையை வெளிப்படுத்தினார்கள்.

ஆடும் லெவனில் இடம்பெறாமல் வெளியில் இருக்கும் வீரர்கள் களமிறங்கும்போதும் சிறப்பாக விளையாடுவதால் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்று அந்த அணியின் ஆலோசகர் லக்ஷ்மன் கூறியுள்ளார்.

மேலும் இதுகுறித்து லக்ஷ்மன் கூறுகையில், "நாங்கள் நெருக்கடிக்கு உள்ளான நேரத்தில் பந்து வீச்சு, துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பு ஆகிய மூன்றில் எது குறித்தும் கவலையடையவில்லை. குறிப்பாக போட்டி நெருங்கி வரும்போது எந்த பதற்றமும் இல்லை. நாங்கள் எப்போதும் மூன்று துறையிலும் முன்னேற்றத்தை பார்க்கிறோம்.

கடந்த வருடம் எங்களிடம் இருந்த சில தவறுகளை புதிய வீரர்களை கொண்டு சரிசெய்து கொள்ள பார்க்கிறோம். புதிய வீரர்களை கொண்டு, சிறந்த களத்தடுப்பை உருவாக்குவது ஆடும் லெவன் அணி, எதிரணி மற்றும் அப்போதைய சூழ்நிலையை பொறுத்தது.

நாங்கள் திறமை வாய்ந்த ஏராளமான வீரர்களை பெற்றுள்ளோம். ஆனால், கிரிக்கெட் போட்டியில் 11 பேர்தான் விளையாட முடியும். அதில் சில துடுப்பாட்ட வீரர்கள் மட்டுமே களமிறங்க முடியும் என்பது துரதிர்ஷ்டவசமானது. நாங்கள் ஒரு பந்து வீச்சாளர் அல்லது ஒரு துடுப்பாட்ட வீரரை மட்டுமே சார்ந்திருக்கவில்லை என்பதை பார்ப்பது சிறந்ததாக உள்ளது.

ரஷித்கான் முக்கிய வீரராக உள்ளார். அவர் விக்கெட்டுக்களை வீழ்த்துவதுடன், கடினமான சூழ்நிலையிலும் சிறப்பாக பந்து வீசுகிறார் என்றார். (க)

# பன்னங்கண்டி மக்கள் தொடர் கவனயீர்ப்பு



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி கிராம மக்கள் காணி உரிமை கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று வியாழக்கிழமை முப்பதாவது நாளை எட்டியுள்ள நிலையில் தொடர்ந்து வருகிறது.

குறித்த மக்கள் 1990 களிலிருந்து மேற்படி பிரதேசங்களில் குடியிருந்து வருகின்ற போதும் அவர்கள் குடியிருக்கும் காணி தனியாருக்குச் சொந்தமானதாக இருப்பதனால் காணி உரிமம் இன்றியே வாழ்ந்து வந்துள்ளனர்.

இதனால் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட உதவி திட்டங்களை பெறமுடியாது மிகவும் நெருக்கடியான நிலைமைகளில் வாழ்ந்து வருகின்றனர். ஏற்கெனவே வறுமைக்கோட்டிற்குள் வாழ்ந்த மக்களுக்கு மீள்குடியேற்றத்திற்கு பின்னர் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட எவ்வித உதவிகளும் கிடைக்காமையினால் அவர்களின் பொருளாதார நிலைமைகள் மேலும் பின்தள்ளப்பட்ட நிலையிலேயே மக்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தங்களுக்கு காணி உரிமம் வழங்கப்பட்டு அதன் பின்னர் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கையை முன்வைத்தே கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

முப்பது நாளாக தொடர்கின்ற தங்களது போராட்டத்திற்கு ஊடகங்கள் மாத்திரமே பக்கபலமாக இருப்பதாகவும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் வருகை தந்து பார்வையிட்டு செல்கின்றனரே தவிர உறுதிமொழி எதனையும் வழங்கவில்லை எனவும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-312)

# ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் பார்சிலோனாவை வெளியேற்றியது யுவான்டஸ்



ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதியில் இரண்டு லெக்குகள் முடிவில் பார்சிலோனாவை 3 - 0 என வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது யுவான்டஸ்.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் காலிறுதியின் 2-வது லெக் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஒரு போட்டியில் பார்சிலோனா - யுவான்டஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

யுவான்டஸ் அணிக்கு சொந்தமான மைதானத்தில் நடைபெற்ற முதல் லெக்கில் யுவான்டஸ் 3-0 என பார்சிலோனாவை வீழ்த்தியது. 2-வது லெக் நேற்று முன்தினம் பார்சிலோனாவிற்கு சொந்தமான மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் 4-0 என யுவான்டஸை வீழ்த்தினால் அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற நிலைமை பார்சிலோனாவிற்கு இருந்தது. காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பி.எஸ்.ஜி. அணிக்கெதிராக இதுபோன்றுதான் 4-0 என பின்தங்கிய நிலையில் இருந்து பார்சிலோனா, தனது சொந்த மைதானத்தில் 6-1 என பி.எஸ்.ஜி-யை வீழ்த்தியது.

இதுபோன்ற அதிசயம் நடைபெறும் என பார்சிலோனா அணியின் ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் யுவான்டஸ் அணியின் அபாரமான ஆட்டத்தால் பார்சிலோனா அணியால் ஒரு கோல்கள் கூட அடிக்க முடியவில்லை. அதைபோல் ஒருகோலும் வாங்கவில்லை. இதனால் 2-வது [illegible] சமநிலையில் முடிந்தது.



முதல் லெக்கில் யுவான்டஸ் 3-0 என வெற்றி பெற்றதால் இரண்டையும் சேர்த்து 3-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.


மற்றொரு ஆட்டத்தில் மொனாகோ 2-வது லெக்கில் டோர்ட்மன்ட் அணியை 3-1 என வீழ்த்தியது. முதல் லெக்கில் 3-2 என மொனாகோ வெற்றி பெற்றது. மொத்தத்தில் 6-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பேயர்ன் முனிச் அணியை வீழ்த்தி ரியல் மாட்ரிட் அணியும், லெய்செஸ்டர் சிட்டி அணியை வீழ்த்தி அட்லெடிகோ மாட்ரிட் அணியும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

அரையிறுதியில் எந்தெந்த அணிகள்மோதும்என்ற அட்டவணை விரைவில் வெளியிடப்படும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் வசந்தகால மலர்க் கண்காட்சி


நுவரெலியாவில் இடம்பெற்றுவரும் வசந்த கால நிகழ்வில் ஒரு கட்டமாக நடைபெற்று கொண்டிருக்கும் மலர் கண்காட்சி நுவரெலியா விக்டோரியா பூங்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. பலவிதமான அழகிய கோணங்களில் பூக்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இங்கு அரிய வகை மலர்களை காணக்கூடியதாகவுள்ளது.

## வெனிசுவெலா ஜனாதிபதிக்கு எதிராக இலட்சக்கணக்கில் திரண்ட மக்கள்



வெனிசுவெலா ஜனாதிபதியை பதவி விலக வலியுறுத்தி நாடு முழுவதும் மக்கள் திரண்டு போராட்டம் நடத்தி வரு கின்றனர்.

இந்த நாட்டில் நீண்ட காலமாக ரபேல் சாவஸ் ஜனாதிபதியாக இருந்து வந்தார். நாட்டின் மிகப் பெரிய தலைவராக திகழ்ந்து வந்த அவர், 2013 ஆம் ஆண்டு நோயால் மரணம் அடைந்தார். அவர் ஆட்சியில் இருந்தவரை நாட்டில் அமைதி நிலவி வந்தது.

அவர் மரணம் அடைந்ததும் நிக்கோலஸ் மாதுரோ ஜனாதிபதியானார். ஆனால், அவரால் ஆட்சியை சரியாக நடத்த முடியவில்லை.

எண்ணெய் வளம் மிக்க நாடாக இருந்தாலும் பொருளாதாரத்தில் வெனிசுலா வீழ்ச்சியை சந்தித்தது. பண வீக்கம் பல மடங்கு அதிகரித்தது.

எனவே, மக்கள் பொருட்களை வாங்க முடியாமல் தவிக்கின்றனர். அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கவில்லை. விலைவாசி கட்டுப்பாடற்ற நிலையில் உள்ளது.

எனவே, ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தி வந்தனர். அவர்களில் பல தலைவர்களை ஜனாதிபதி கைது செய்து சிறையில் அடைத்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நாடு முழுவதும் ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினார்கள்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும், உடனடியாக ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டும், சிறையில் உள்ள எதிர்க்கட்சி தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெற்றது.

தலைநகரம் கராகஸ், மற்றொரு முக்கிய நகரமான சான் கிறிஸ்டோபல் ஆகியவை உள்ளிட்ட பெரும்பாலான நகரங்களில் மக்கள் வீதிகளில் திரண்டு போராட்டம் நடத்தினார்கள்.

இதில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அப்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியதுடன் தடியடியும் நடத்தினார்கள்.

கராகஸ் மற்றும் சான் கிறிஸ்டோபலில் துப்பாக்கி சூடு நடந்தது. கராகஸ் நகரில் நடந்த துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார்.

ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் நேற்றும் நீடித்தது.

இதனால் வெனிசுவெலாவில் எங்கு பார்த்தாலும் கலவர சூழ்நிலை நிலவுகிறது. (இ-3)


அமரர் **இ.த.பத்திநாதர்** அவர்களின்

**31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



அன்னையின் மடியில்
08.04.1927
ஆண்டவன் அரவணைப்பில்
22.03.2017

அமரர்
**இராயப்பு தம்பியையா பத்திநாதர்**
(ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்)

*எங்கள் பாசமுள்ள பப்பாவே!*

பார்க்கும் இடமெல்லாம் உங்கள் அன்பு உருவமும் கேட்கும் ஒலியெல்லாம் உங்கள் குரலுமே எம் மத்தியில் இருப்பதாகவே உணர்கின்றோம் குடும்பம், ஊர், சமூகம் வாழ அரும்பாடுபட்டு உழைத்தீர்கள். மனிதன் இறக்கும் போது எப்படி இறந்தான் என்பதல்ல. எப்படி வாழ்ந்தான் என்பதே முக்கியம்.

மக்களின் மனதில் மாமனிதராகவே வாழ்ந்த பப்பாவே! நீங்களும் அம்மாவும் எமக்கு ஊட்டி வளர்த்த நற்பண்புகள் ஆலமர விழுதுகள் போல் வேரூன்றி சமுதாயத்தில் எம்மை நிலைத்து சிறப்புடன் வாழ வைத்திருக்கிறது.

உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்.

எமது அன்புத் தந்தையாரின் துயரச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து எமது துயரில் பங்கு கொண்ட யாழ். ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் யாழ். மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர்களுக்கும் அனைத்து அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகளுக்கும், மேல் நீதிமன்ற நீதிபதிகள், அனைத்து மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதிகள் பிரதேச செயலாளர்கள், மாவட்ட காணிப்பதிவாளர்கள், ஜனாதிபதி சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் மேல் நீதிமன்ற , மாவட்ட நீதிமன்ற பதிவாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர், இலங்கை செஞ்சிலுவைக் கிளை சங்கங்களின் கௌரவ ஆளுநர் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் , ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், ஊழியர்கள், ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள், மூத்தோர் சங்க உறுப்பினர்கள், சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொலைவிடங்களில் இருந்து நேரடியாகவே வருகை தந்து எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி வாயிலாவும், இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகவும் ஆறுதல் கூறிய வெளிநாட்டு, உள்நாட்டு அன்பு உள்ளங்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மேலும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி-8216)

இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
077 730 4596

அமரர் இ.த.பத்திநாதர்
குடும்பத்தினர்.


## இராசி பலன்

21.04.2017
(சித்திரை 08, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
தசமி பின்னிரவு 1.08 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.59 மணிவரை
சுபநேரம் 6.01-7.31 மணிவரை
இராகுகாலம் 10.31-12.01 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | |
| சந் கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம், பூசம்<br>காலை 10.46ற்கு<br>கும்- சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம் உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்

**மேடம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** சமுதாயத்தில உயர்ந்த நிலைக்குவரத் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள் பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**கடகம்** கணபதியை வழிபட்டு காரியம் தொடங்கும் நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மகரம்** தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கைகள் இடம்பெறலாம்.

**தனுசு** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பயனுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**துலாம்** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் பாதுகாப்புக் கடவையில் மோதி கால்வாய்க்குள் கவிழ்ந்தது-யுவதி காயம்

## யாழ்.ஆரியகுளம் பகுதியில் சம்பவம்

யாழ்.ஆரியகுளம் சந்திப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று. புகையிரத பாதுகாப்புக் கடவையில் மோதுண்டு அருகில் உள்ள கால்வாய்க்குள் விழுந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்றைய தினம் நண்பகல் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற யுவதி சிறு காயங்களுக்குள்ளாகி மயிரிழையில் உயிர்தப்பினர்.

குறித்த யுவதி வேம்படி சந்தியில் இருந்து ஆரியகுளம் சந்தி நோக்கி மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற போது திடீரென புகையிரத கடவை சமிஞ்ஞை ஒலித்துள்ளது. இதனால் தடுமாறிய யுவதி மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப் படுத்த முடியாமல் எதிரே இருந்த பாதுகாப்புக் கடவையில் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

அருகில் நின்றவர்கள் அவரை காப்பாற்ற சென்ற



போது மோட்டார் சைக்கிள் கால்வாய்க்குள் விழுந்துள்ளது. மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)



கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாற்றாற்றலுடைய இருவருக்கு மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் வைத்து உதவிப் பிரதேச செயலர் எஸ்.றஜீவினால் இவை வழங்கப்பட்டன. இதில் கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவைப் பகுதி அதிகாரி எஸ். வரதபாஸ்கரனும் கலந்து கொண்டிருந்தார். (படம்:-மகாலிங்கம்)

## இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

கிறீன் பீல்ட் சனசமூக நிலையம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் குருசோ வீதியிலுள்ள கிறீன் பீல்ட் மண்டபத்தில் இடம்பெறும். இவ் இலவச மருத்துவ முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், உடற்திணிவுச் சுட்டி (B.M.I), கண்பார்வைக் குறைபாடு என்பன பரிசீலிக்கப்படும். மூக்குக் கண்ணாடி மற்றும் நீரிழிவுக்கான கை நூல் இலவசமாக வழங்கப்படும் . அனைவரும் கலந்து கொண்டு பயனடையுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-3)




## கைக்குண்டுடன் கைதான இளைஞனுக்கு எதிர்வரும் 3ம் திகதி வரை விளக்கமறியல்

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த18 ஆம்திகதிநான்கு பிடியாணையுள்ள மேற்படி நபரைக் கைது செய்த போது அவரிடம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று காணப்பட்டது. அவ் இளைஞனை நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான்உத்தரவிட்டார். (இ-60)

## எழுதுகருவிகள் நன்கொடை



ஐக்கிய இராச்சியத்தில் இயங்கிவரும் சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தினரால் ஒவ்வொன்றும் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஏழு பிறேயில் எழுதுகருவிகள் சுன்னாகம், சபாப திப்பிள்ளை வீதியில் இயங்கி வரும் 'வாழ்வக நிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. இவை அண்மையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நா. வேதநாயகனால் வாழ்வக நிறுவனத்தினரிடம் கையளிக்கப்பட்டன. (இ-3)

## கவிதை நூல் வெளியீட்டு விழாவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

கலாபூஷணம் புத்தூர் வே.இளையகுட்டியின் கவிதை நூல் வெளியீட்டு விழாவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம் பெறும். (இ-3-60)

# தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மேதின எழுச்சி நிகழ்வு சாவகச்சேரியில்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 2017 ஆம் ஆண்டு மேதின தொழிலாளர் தின எழுச்சி நிகழ்வு இம்முறை சாவகச்சேரியில் நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இணைந்து நடத்தும் தொழிலாளர் தினப் பேரணியும் பொதுக் கூட்டமும் சாவகச்சேரியில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியன்று இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு புகையிரத நிலையம் அருகாமையிலுள்ள சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி தொகுதி அமைப்பாளரான யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற உதவிப் பதிவாளர் யோகேஸ்வரன் ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை. காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிதலை வலியுறுத்தல் தமிழ்த் தொழிலாளர்கள். தமிழ் விவசாயிகள்.தமிழ் மீனவர்கள் மீதான ஒடுக்குமுறையிலிருந்து விடுபடல். காணி அபகரிப்பை தடுத்தல். மீள் குடியேற்றத்தை வலியுறுத்துதல். இராணுவ மயமாக்கலை தடுத்தல். கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தல். வேலை யற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வலியுறுத் தல், இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனவழிப்பு. போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை வலியுறுத்தல். தாயகம். தேசியம். சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தை வலியுறுத்தல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இந்தக் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்க அனைவரையும் அணி திரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-4)

## சுவிசேஷப் பிரசங்கம்

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷப் பிரசங்கங்களும் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிக்கு இளையதம்பி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபைச் சாலையில் இடம்பெற்று வருகின்றது. (இ-3)

## ஆட்டோ எரிப்பு; மூவர் கைது

(கரணவாய்)

கற்கோவளம் பகுதியில் ஆட்டோ ஒன்றினை எரித்தமை தொடர்பில் மூவரை தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி பகுதியில் ஆட்டோ எரிக்கப்பட்டமை தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை அதே பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைது செய்தனர். (இ-60)

## வெற்றிடங்களை நிரப்ப நேர்முகத்தேர்வு



(யாழ்ப்பாணம்)

மனிதவள வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் தொழிற் சந்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இலங்கையின் முன்னணி நிறுவனங்கள் தமது வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத்தேர்வை நடத்தின.

இதில் . தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 400 இளைஞர். யுவதிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (இ-89)



அன்னை பூபதியின் 29 ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொண்டு அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-சாளின், கிஷோர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு தெரியாமல் விடப்பட்ட அறிக்கை

2015 ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தோல்வியைச் சந்தித்ததற்கான காரணங்களை நேற்றைய தொடரில் பிரஸ்தாபித்திருந்தோம். தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முக்கியமான வகிபங்கைக் கொண்டிருந்தது. பல்கலைக்கழக மாணவர்கள் மிகப்பெரும் பங்காளர்களாக இருந்தார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலை அரங்கிற்கு தென்கிழக்கு திசையில் இருக்கின்ற கட்டடத்தில் மறுமலர்ச்சிக் கழகம் (எம்.எம்.கே.) என்ற அமைப்பு இயங்கியது. விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் புகைப்படங்கள் அந்தக் கட்டடத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

கூடவே யுத்தம் நடக்கின்ற போதெல்லாம் காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கின்ற பொறுப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினூடாக பல்கலைக்கழக மாணவர்களே செய்திருந்தனர்.

இராணுவ முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துகின்ற வேளைகளில் நூற்றுக்கு மேற்பட்ட போராளிகள் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுவர். இவ்வாறு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போராளிகளைப் பராமரிக்கின்ற பணியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரவு பகலாக செய்வர். இதற்கு மேலாக;' காயமடைந்த போராளிகளுக்குத் தேவையான குருதியை யாழ். பல்கலைக்கழக மாணவர்களே தானம் செய்தனர். மறுமலர்ச்சிக் கழகத்திற்குத் தகவல் கிடைத்ததும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் எம்.எம்.கேயும் இணைந்து அனைத்துப்பீட மாணவர்களுக்கான கூட்டத்தை கைலாசபதி கலையரங்கில் நடத்துவர். இக்கூட்டத்தில்தான் அனைத்துப்பீட மாணவர்களுக்கான பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

இது தவிர, யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்தல், அவர்களுக்குத் தேவையான உலர் உணவு வகைகள், உடுபுடைவைகளை பொதுமக்களிடம் சேகரித்து வழங்குதல் என்ற பணியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டனர். இவை 1990 காலப்பகுதியில் இருந்து நீடித்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சொன்னால் அதனை அப்படியே.ஏற்றுக்கொள்கின்ற ஒரு பண்பாட்டு நடைமுறை நம் தமிழ் மக்களிடம் இருந்தது. இன்று அந்த நிலைமை அடியோடு இல்லாமல் போய் விட்டது. இது ஒரு துரதிர்ஷ்டமான நிகழ்வு 2015 ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது ஏற்பட்டது.



ஆம் 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பதவிக்காலம் முடிந்திருந்தது. அதேவேளை மருத்துவ பீட மாணவர் ஒன்றியம், வணிக முகாமைத்துவபீட மாணவர் ஒன்றியம் என்பவற்றின் நிர்வாகத் தெரிவுகளும் நடைபெறாத நிலைமை. இத்தகைய நிலைமை எதற்காக ஏற்பட்டது என்பதைத் துல்லியமாகக் கூறமுடியாது போனாலும் 2015 ஆம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஒன்றியத்தின் தலைவராக இருந்த மாணவர் ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேர்தலில் ஆதரிப்பதாக ஓர் அறிக்கை விடுத்திருந்தார். அந்த அறிக்கை கலைப்பீட மாணவர் ஒன்றியம் சார்பாக விடாமல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியங்களையும் உள்ளடக்கியதான யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சார்பாக விடுக்கப்பட்டிருந்தது. சுருங்கக் கூறின் ஒரு கபடத்தனமான முறையில் அந்த அறிக்கை விடுக்கப்பட்டது என்றே சொல்லவேண்டும்.



அதிலும் தான் சார்ந்த கலைப்பீட மாணவர்களுக்கோ அல்லது ஏனைய பீட மாணவர் ஒன்றியங்களுக்கோ தெரியாமல் அந்த அறிக்கை விடுக்கப்பட்டதுதான் மிகப் பெரிய துரோகத்தனமாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் யாரையும் ஆதரிக்கலாம். அது அவர்களின் உரிமை. அதற்காக ஒரு முக்கியமான தேர்தலில் யாரையும் கேட்காமல், மாணவர் அமைப்புக்களுடன் கூடி ஆராயாமல் சில சலுகைகளுக்காக இயங்காத மாணவர் ஒன்றியத்தின் பெயரைப் பயன்படுத்தி அறிக்கை விடப்பட்டது பல்கலைக்கழக மாணவர்களுக்கு தீராத இழுக்கை தேடிக் கொண்டது.

அன்றைய தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில வேட்பாளர்கள் வழங்கிய மடிக் கணனிக்காக அப்படியொரு அறிக்கை விடப்பட்டதான தகவலை அறிந்த போது மறுமலர்ச்சிக் கழகத்தில் மாவீரர்களாகப் பூசிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் நினைவுகளே பலருக்கும் வந்து போனது.

இவ்வாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிக்கை விடுவதற்கு மூல காரணமாக இருந்தவர் அன்றைய சிரேஷ்ட மாணவ ஆலோசகர் என்று பல்கலைக் கழகத்தில் பரவலா கப் பேசப் பட்டது. 2015 காலப்பகுதியில் சிரேஷ்ட மாணவ ஆலோசகராக இருந்த ஒரு நல்ல விரிவுரையாளர். க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவு மாணவர்களின் மரியாதைக்குரிய ஆசிரியர். ஏன்தான் அவர் இப்படி நடந்து கொண்டார் என்று அவருடைய மாணவர்கள் தமக்குள் கேள்வியெழுப்பியதும் உண்டு. என்ன செய்வது ' புத்திஜீவிகள் பொது நலன் என்பதை மறந்து போனால் எல்லாமும் அம்போ என்றாகி விடும் என்பதற்கு மேற்போந்த நிகழ்வுகள் நல்ல எடுத்துக்காட்டாகும்.

எது எவ்வாறாயினும் 2015 இல் இயங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் செய்தது போன்ற ஒரு மோசமான காரியம் இனிமேல் இடம்பெறாதிருப்பதை பல்கலைக் கழக மாணவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் கணிசமான மதிப்பும் மரியாதையும் உண்டு. இதனை 2015 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வுகள் வேரறுத்துவிடும் என்பதால் எதிர்வரும் காலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் நேர்மைத்திறத்துடன் சரியான பாதையில் தமது வழிகாட்டலை செய்ய வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

**திங்கள் வளரும்**

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன் உருவச்சிலை முல்லைத்தீவில் திறந்து வைப்பு





வன்னியின் அடையாளம் மாவீரன் குலசேகரன் வைரமுத்து பண்டாரவன்னியனின் உருவச்சிலை நேற்று முல்லைத்தீவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இந்த சிலையை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் திறந்து வைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் கோரிக்கைக்கு அமைய, வடமாகாண கலை, பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் உருவச் சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட பீரங்கி மீட்கப்பட்ட இடத்திலிருந்து, நேர் எதிரே உள்ள இடத்தில் குறித்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், சிவனேசன், சிவாஜிலிங்கம்,முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-5-281)

# கன்டெய்னர் பெட்டியினுள் சட்டவிரோத செயல்கள்; சோதனையில் போதைப்பொருட்கள் கைப்பற்று



மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய புனித பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் மூடப்பட்ட நிலையில் பாவனையில் இல்லாத கன்டெய்னர் பெட்டி ஒன்றினுள் நீண்டகாலமாக சட்டவிரோத செயல்களும் மற்றும் சமூக விரோத செயல்களும் நடைபெற்று வந்த நிலையில், மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரெரோவின் உத்தரவுக்கமைய விசேட பரிசோதனையை மேற்கொண்ட பொலிஸார் மதுபான போத்தல்கள், கஞ்சா கலந்த புகைத்தல் பொருட்கள் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய புனித பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் முத்தையன்கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கிளை விற்பனை நிலையம் ஒன்று உள்ளது.

இந்த நிலையம் நீண்டகாலமாக பூட்டப்பட்டு இருந்ததுடன் அதற்கு பக்கத்தில் சங்கத்தின் பாவனையில் இருந்த நிலையில் தற்போது பயன்படுத்தாத கன்டெய்னர் பெட்டி ஒன்றும் இருந்துள்ளது.

இந்த பெட்டியில் நீண்டகாலமாக இனந்தெரியாத நபர்கள் இரவு நேரங்களில் உள் நுழைந்து தங்கியிருந்து சமூகச் சீர்கேடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இதனை அறிந்த திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய அறங்காவலர் சபையினர், கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் வர்த்தக சங்கம் உட்பட கிராம மக்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேராவின் உத்தரவுக்கமைய, மாங்குளம் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் நிலந்த பெருசிங்க மற்றும் பொலிஸ் கொஸ்தபல்களான தனுஸ் ,சுவீதரன் ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் சோதனை நடவடிக்கையின் போதே போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நபர்களை விரைவில் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர். (2-5-15)

# யானை சுட்டுக்கொலை; அதிகாரி பணி இடைநிறுத்தம்

வவுனியா - கொம்புவைத்தகுளம் பகுதியில் காட்டு யானையொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர், கடமைகளில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

ஓமந்தை - கொம்புவைத்தகுளம் பகுதியிலுள்ள விவசாயக் கிணற்றில், கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு யானைக் குட்டிகள் உள்ளடங்கலாக நான்கு யானைகள் வீழ்ந்திருந்தன. பிரதேச மக்களும் ஒமந்தை பொலிஸாரும் இணைந்து, அன்றிரவே இரண்டு குட்டி யானைகளை மீட்டனர்.

மிகுந்த பிரயத்தனத் தின் மத்தியில் மறுநாள் இரண்டு யானைகள் மீட்ட போதிலும், யானைகள் காட்டுக்குச் செல்வதற்கான வீதியில் பெக்கோ இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அவற்றால் காட்டுக்குள் செல்ல முடியவில்லை. இதனால், யானை ஒன்று பெக்கோ இயந்திரத்தை தாக்க முயன்றுள்ளது. இதன் போது வனஜீவராசிகள்திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு யானை உயிரிழந்தது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தரே, கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். (2-5)

# விளையாட்டு விழா கலந்துரையாடல்

(சிவநகர்)

தமிழ் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு விழா 2017 நடத்தப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், உயிரிழை நிறுவனம் ஆகியன இணைந்து தமிழ் மாற்றுத் திறனாளிகளுக்கான மாகாண விளையாட்டு விழாவை ஜூலை மாத இறுதி வாரத்தில் கிளிநொச்சியில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறுமெனவும் இக்கலந்துரையாடலில் தங்கள் ஒத்துழைப்பையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வழங்கி உதவுமாறு முதியோர் அமைப்புக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வேலவன்.வே.தயநிதிரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-5-254)




# நேற்றுடன் இரண்டு மாதங்கள் கடந்துள்ளன அநாதைகளாக நாம் வீதியில் போராடுகின்றோம்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத் தலைவி தெரிவிப்பு




(பரந்தன்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான நாங்கள் எங்கள் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் அறுபதாவது நாளாகிறது. இந்த அறுபது நாளிலும் நாங்கள் அநாதைகள் போலவே வீதியில் போராடி வருகின்றோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் இரண்டு மாதங்களை எட்டியுள்ளது. எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி கலாரஞ்சனி நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இன்றுடன் (நேற்று) அறுபதாவது நாளாக கைவிட்டுள்ளதாகவும் 60 ஆவது நாளாக தாங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்குள் மத்தியில் காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளுக்காக அவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவை எதிர்பார்த்து கவனயீர்ப்பை ஆரம்பித்த போதும் இந்த போராட்டத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை என்றும் கவலை தெரிவிக்கும் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்களின் சங்கத் தலைவி தெரிவித்துள்ளார். (2-5-312)

# ஒட்டுசுட்டான் நகரப்பகுதியில்

## பார்த்தீனியச் செடிகளை கட்டுப்படுத்தும் மாபெரும் சிரமதானப்பணி 27ஆம் திகதி

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் "பார்த்தீனியச் செடி ஒழிப்பு வேலைத்திட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு" நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குண நேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஒட்டுசுட்டான் நகரப் பகுதிகளில் காணப்படும் பார்த்தீனியச் செடிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் முன்னோடி நிகழ்வாக இக் கருத்தரங்கு ஒட்டுசுட்டான் நகரப் பகுதி கமக்கார அமைப்பு விவசாயிகள், ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர்கள் உட்பட 40, பேருக்கு நடைபெற்றுள்ளது.

இதில் வளவாளராக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச் சந்திரன், பாட விதான உத்தியோகத்தர் (பழப்பயிர்), மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (பயிர் பாதுகாப்பு ), ஒட்டுசுட்டான் இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோர் பார்த்தினியச் செடியின் தீமைகள், அதன் பரம்பல் முறைகள் உட்பட பல பயனுள்ள தகவல்களை வழங்கியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் நகரப் பகுதிகளில் உள்ள பார்த்தினியச் செடிகளை கட்டுப்படுத்தும் மாபெரும் சிரமதானப் பணி எதிர்வரும் 27. ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்த முடியாத நிலையில் ரி-56 ரக 82 துப்பாக்கிகள் மீட்பு



(பரந்தன்)

கிளிநொச்சி முகமாலை பகுதியில் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட ரி-56 ரக துப்பாக்கிகள் 82 மீட்கப்பட்டுள்ளன.

முகமாலை பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் டாஸ் நிறுவனத்தினரால் நேற்று முன்தினம் இவை கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

பரல் ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட துப்பாக்கிகளில் அனைத்தும் முழுமையாக காணப்படவில்லை. இவை அனைத்தும் பளை பொலிஸாரிடம் நேற்று முன்தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன. (2-5-312)




# காணாமற்போனோரின் உறவுகள் கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு

(பரந்தன்)

நாங்கள் அநாதைகள் போலவே வீதியில் போராடி வருகின்றோம். தீர்க்கமான முடிவை எதிர்பார்த்து கவனயீர்ப்பை ஆரம்பித்து நேற்றுடன் 2 மாதங்கள் கடந்துள்ளன. இந்நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் முழுக்கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாக கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் 60 ஆவது நாளை எட்டியுள்ளது.

எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போது மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி கிளிநொச்சியில் முழு கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளோம். அன்றைய தினம் மாவட்டத்தில் உள்ள வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புக்கள், போக்குவரத்துச் சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள், அரசியல் தரப்புகள் என அனைவரும் ஒன்றிணைந்து தங்களது போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒத்துழைப்பு வழங்கி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் நல்ல தீர்வை பெற்றுக் கொள்ள வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். (2-5-312)

## முதியோரின் எதிர்காலத்திற்கான பயணம்; நிறைவு செய்தார் கலைஞர் பிரதாபன்



(வவுனியா)

நாட்டிலுள்ள வயோதிபர் இல்லங்கள் இல்லாதொழிக்க வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வவுனியாவை சேர்ந்த கலைஞரான தர்மலிங்கம் பிரதாபன் என்ற இளைஞன் துவிச்சக்கரவண்டியில் இலங்கை சுற்றி தனது பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

வவுனியா கந்தசுவாமி கோவில் முன்பாக கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு தனது பயணத்தினை ஆரம்பித்த இவர் 1515 கிலோ மீற்றர் தூரத்தினை சுற்றிவந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து தனது பயணத்தினை ஆரம்பித்த, இவர் சுமார் 11 நாட்களில் இலங்கை சுற்றி வருவதற்கான கால எல்லையை நிர்ணயித்து தனது பயணத்தினை தொடங்கிய நிலையில் கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இச் சாதனைப்பயணத்தினை நிறைவு செய்துள்ளார்.

இப் பயணத்தினை நிறைவு செய்த பிரதாபன் பயணத்திற்கு ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். (2-5-60)

# மீதொட்டமுல்லயில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலியும்





கொழும்பு, மீதொட்டமுல்ல குப்பை மேட்டு சரிவில் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அஞ்சலி நிகழ்வும் வவுனியா புளியடி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

புளியடி ஆலய பரிபாலன சபை, தமிழ்விருட்சம்சமூக ஆர்வலர் அமைப்பு மற்றும்மாவட்ட அந்தணர் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கொழும்பு, மீதொட்டமுல்ல பகுதியில் புதுவருடத் தினத்தன்று இடம்பெற்ற அனர்த்தத்தில் மரணித்த மக்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி விசேட பிரார்த்தனை இடம்பெற்றதுடன், தீபங்கள் ஏற்றியும் கர்ப்பூரம் கொளுத்தியும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.வாசன், தமிழ் மணி அகளங்கன், தமிழ் விருட்சம் தலைவர் செ.சந்திரகுமார், அந்தணர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (2-5-250)

## முப்படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள

# காணிகளை விடுவித்தல் தொடர்பிலான மாவட்ட உயர்மட்ட கலந்துரையாடல்





(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல் தொடர்பிலான மாவட்ட உயர்மட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறிதரன். மாகாண சபை உறுப்பினர் பசுபதிபிள்ளை, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சாமந்தி வீரசிங்க, படையினர் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடலே இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஊடகவியலாளர்கள் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் மாத்திரமே மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-312)

## மக்கள் மத்தியில் உலாவரும்

# கரை எழில் நூலை மீளப்பெறவேண்டும்

கிளிநொச்சியில் உள்ள மலையக மக்களை இழிவுபடுத்தும் கரை எழில் நூல் தொடர்பில் கட்டுரையாளரும், கரைச்சி பிரதேச செயலகமும் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என மலையக மக்கள் சார்பில் சிவில் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.


கிளிநொச்சி ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 7 ஆம் திகதி மலையாளபுரத்தில் வைத்து மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையில் கரை எழில் என்ற நூல் கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. குறித்த நூலில் எமது சமூகத்தினை இழிவுபடுத்தியும், எமது சமூகத்திற்கு ஒவ்வாத சொற்பிரயோகங்களையும் அவர்கள் குறித்த நூலில் பதிப்பு செய்து வெளியிட்டுள்ளார்கள்.

குறித்த செயற்பாட்டிற்கு கட்டுரையாளரும் அதை வெளியிட்ட கரைச்சிப் பிரதேச செயலக கலாசார பேரவையும் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டுமே அல்லாமல், வெறுமனே முகநூல் ஊடாக வருத்தம் தெரிவிப்பது கண்டிக்கத்தக்கது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச செயலாளர் சர்ச்சைக்குரிய கட்டுரை நீக்கப்பட்டு கரை எழில் நூல் விற்பனை செய்யப்படும் என தெரிவித்துள்ளதாகவும், அவ்வாறு வெளியீடு செய்வதை உடனடியாக நிறுத்தி, ஏற்கனவே மக்கள் மத்தியில் உலாவி வரும் சர்ச்சைக்குரிய கட்டுரை தாங்கிய நூல்களை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீதொட்டமுல்லயில் மீட்புப் பணிகள் 7-வது நாளாக நேற்றும் முன்னெடுப்பு

(கொழும்பு )

கொழும்பு - மீதொட்ட முல்ல குப்பை மேட்டு சரிவு அனர்த்தம் இடம் பெற்ற பகுதி யில் மீட்புப் பணிகள் 7ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக் கப்பட்டன. முப்படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவ தாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் சென விரத்ன தெரிவித்துள்ளார்.



இந்நிலையில்நேற்று முன்தினமும் சடலமொன்றை மீட்பு பணியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

இதற்கமைய இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 32ஆக அதிகரித்திருக்கிறது.

இந்த விபத்தில் பாதிக்கப் பட்ட 245 குடும்பங்களைச் சேர்ந்த 1059 பேர் கொலன்னாவ டெரன்ஸ் மகா வித் தியாலயத்தில் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த 11 பேர் கொழும்பு தேசிய வைத் தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் 8 பேர் இந்த அனர்த்தத்தில் காணாமல் போயிருப்பதாக தெரிவிக்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ச் சியாக இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# குப்பை மேட்டு அனர்த்தம் தொடர்பாக ஆராய நீதிபதிகள் குழு அமைக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)



மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்த அனர்த்தம் தொடர்பில் ஆராய்ந்து எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப் பிக்க ஓய்வுபெற்ற நீதிபதிகள் குழுவொன்றை நியமிக்கவுள் ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களின் உரிமையாளர்களை ஜனாதிபதி மாளிகையில் நேற்று சந்தித்து கலந்துரையாடுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

5 பில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீட்டுடன் நாட்டின் பொருளாதாரம் ஸ்திர மான நிலையை அடைந்துள்ளதுடன் நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் பயணிக்கின்றது.எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரச நிறுவனங்கள் மற்றும் அரசாங்க பதவிகளில் முக்கிய மாற்றங்கள்முன்னெடுக்கப்படவுள்ளதுடன் பல புதிய முறைகளும்நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.அண்மையில் மீதொட்டமுல்லயில் இடம்பெற்ற குப்பைமேடு சரிவு தொடர்பில் முக்கிய சூத்திரதாரிகளை அறிவதற்காக முன்னாள் நீதிபதிகள் அடங்கிய குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும்ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்.

கணக்காய்வு சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க, சம்பந்தப்பட்ட தரப்புக்கு ஆலோசனை வழங்கவுள்ளதாகவும் இச் சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.(இ-7)

## காணாமல் போன எஜமானனுக்காக குப்பை மேட்டில் காத்திருக்கும் நாய்



(கொழும்பு)

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்தமையினால் புதைந்து போன வீட்டின் சிதைவுகளின் மீது, கடந்த 14ஆம் திகதி முதல் நாய் ஒன்று படுத்திருக்கும் புகைப்படம் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. தனது எஜமானை காணாமல் இந்த நாய் தவித்து வருகிறது. பல நாட்களாக உணவு, நீரின்றி இந்த நாய் அங்கு அமர்ந்திருப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்தமையால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் இதுவரை 32 பேர் பலியாகி உள்ளனர். மேலும் தேடும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இணையத்தின் ஊடாக கடவுச் சீட்டு பெறலாம்

இணையம் மூலம் கடவுச் சீட்டுக்களை வெளியிடுவது குறித்து முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப் படும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.இந்த திட்டத்திற்கான ஆரம்ப படிமுறைகள் வெற்றிகரமாக முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.(இ-7)

## மீதொட்டமுல்ல குப்பை மேட்டை உருவாக்கியவர் கோத்தபாய தான்

(கொழும்பு)



மாதம்பிட்டி குப்பை மேட்டை அரசுடைமையாக்கி, அதனை பலாத்காரமாக கோத்தபாய ராஜபக்ஷவே மீதொட்ட முல்லக்கு கொண்டு சென்றார் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் கோத்தபாயவுக்கு தேவையான முறையில், பிரதம நீதியரசராக இருந்த சரத் என்.சில்வா இரண்டு ஏக்கர் பகுதியில் குப்பைகளை கொட்டுமாறு உத்தரவிட்டதுடன் எதிர்ப்பவர்களை கைது செய்யுமாறும் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார். (இ-7)

## தேங்காய் திருடியவர் துப்பாக்கிச் சூட்டில் பலி

பன்னல ஹெண்டியாகல பகுதியில் நேற்றுக்காலை சட்ட விரோதமாக தேங்காய்த் தோட்டமொன்றுக்குள் பிரவேசித்து தேங்காய் திருடிக் கொண்டிருந்த நபரின் மீது தோட்டத்தின் காவலர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான நபர் இரு [illegible] வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மே தினக்கூட்டம் புறக்கோட்டையில்

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மே தினக் கூட்டம் புறக்கோட்டையில் நடத்தப்படும் என அக் கட்சியின் தலைவர் ஹெடில்லே விமலசார தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 1 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் அனைத்து முக்கியஸ்தர்களும் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனினும், மே தினப் பேரணி எதனையும் நடத்தப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (இ-7)

# சர்வமத விழா நாளை

மானிப்பாய்ஸ்ரீசத்ய சாய் பாடசாலையின் சர்வமத விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை மானிப்பாய் சோதி.வேம்படி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாய் பாடசாலையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, சிறப்பு விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினராக ஸ்ரீ சத்திய சாய் சேவா உலக நிறுவன(இலங்கை) தலைவர் ஸ்ரீ வி.மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3)


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம். (அ-7888)

**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567


இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி விலை மனுக்கோரல்

### இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளின் விற்பனை

### கேள்வி இல. 2017/NP/05

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளை விற்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பங்களை செயற்பாட்டு முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி , வடமாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இடமிருந்து மீளளிக்கப்படாத தொகையான ரூபா 5000/- + வரிகள் (VAT +NBT) இனையும், மீளளிக்கப்படும் தொகையான ரூபா 100000/- இனையும் வைப்புச் செய்ததன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும். (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

விலை கோருபவர்கள் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளை வைப்பிலிடும் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வியாபார நிறுவனமெனின் - வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி / கூட்டிணைவுச் சான்றிதழின் பிரதி

தனிப்பட்ட நபரெனின் - தேசிய அடையாள அட்டையின் பிரதி / சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் கிளைகளில் தங்க நகைப் பொதிகளை பரிசீலிக்க முடியும்.

| இடம் மற்றும் முகவரி | பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் |
|---|---|
| இலங்கை வங்கி | திகதி : 30 ஆம் திகதி ஏப்ரல் 2017<br>நேரம் : காலை 9.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை |
| 1.பருத்தித்துறை கிளை<br>2.கைதடி கிளை<br>3. மானிப்பாய் கிளை<br>4. உரும்பிராய் கிளை<br>5.திருநெல்வேலி கிளை<br>6. சாவல்கட்டு கிளை<br>7.காங்கேசன்துறை கிளை | பரிசீலனை நேரத்தினை, விண்ணப்பதாரர்கள் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக முற்பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br>பெயர் : திரு.க. சகாதேவன்<br>தொலைபேசி இல : 021 222 4683, 077 512 1983 |

கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 3ஆம் திகதி மே 2017 பி.ப 3.00 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் :4 ஆம் திகதி மே 2017 மு.ப 10.00 வரை

விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட தங்க நகை பொதிகளுக்கு விலை கோர முடியும். அதேசமயம் அவ்விலை கோரல்கள் யாவும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டு ஒரே கடித உறையினுள் இடப்படலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம், விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலை கூறல்களை 4ஆம் திகதி மே 2017(கேள்வி முடிவுத்திகதி) மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்), இலங்கை வங்கி, வடமாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். காலதாமதமாகிய விலை கூறல்கள் யாவும் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாது விலை கூறியோருக்கு மீள அனுப்பப்படும். காலதாமதமான விலை கூறல்கள் தொடர்பாக தபாலில் இட்டமைக்கான சான்றுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலை கூறல்கள் ஏற்கப்படும் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விலை கோரியவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விலைகூறிய ஒருவருக்கு ஒரு பிரதிநிதி) கேள்விகள் திறப்பின் போது சமுகமளிக்கலாம்.

தெரிவு சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர்/களுக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளரினால் அறியத்தரப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர், தெரிவு செய்யப்பட்டமை அறியத்தரப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்களினுள் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். முழுத்தொகையை செலுத்திய நாளிலிருந்து 7 நாட்களினுள் சம்பந்தப்பட்ட கிளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விலை கூறியவருக்கு தங்க நகைப் பொதி கையளிக்கப்படும்.

எக்காரணமும் குறிப்பிடாது விலை கூறல் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்),
இலங்கை வங்கி,
வட மாகாண அலுவலகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8148)

தொலைபேசி இல: 021 222 [illegible]
திகதி: 21.04.2017

# கலை இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ் வருடத்திற்கான பிரதேச மட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பாடசாலைமட்டம், திறந்த பிரிவு என போட்டி உள்ளடங்கும்.

இப் போட்டியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 26.05.2017 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பித்தல் வேண்டும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## திருத்தம்

### விண்ணப்ப முடிவுத் திகதியினை நீடிப்புச் செய்தல்

### மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வடக்கு மாகாணம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு -

1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞான பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்) - 2017 (II)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட விளம்பரத்தின் முடிவுத் திகதியானது 2017.05.05 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கோரப்பட்ட விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும் தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் மாத்திரம் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ரூ.வரதலிங்கம்.
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(சி-8149)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: B/7214 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 46 செவ் .8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BCA/தனியார்தொழில்<br>தொ.இ: G/7238 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.EEng/தனியார் தொழில்<br>தொ.இ: B/7215 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 46<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7252 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:BA/சொந்ததொழில்<br>தொ.இ: B/7216 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/7254 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா: 30<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7217 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 43<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/7256 |

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. இரு அணிகளும் இன்று விசேட சந்திப்பு



## பொதுச் செயலாளர் யார் பழனிச்சாமி நீடிப்பாரா பன்னீர்செல்வம் வருவாரா ?





(சென்னை)

அ.தி.மு.க. இரு அணிகளை இணைப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்து உள்ளது. இரு அணிகளை சேர்ந்த தலைவர்களும் இன்று வெள்ளிக்கிழமை சந்தித்து பேசுகிறார்கள்.

அ.தி.மு.கவில் இருந்து சசிகலா குடும்பத்தினர் வெளியேற வேண்டும் என்பதே ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை ஆகும்.

இந்தக் கோரிக்கையை அமைச்சர்கள் ஏற்று அறிவிப்பு வெளியிட்டனர். இதை ஏற்று அ.தி.மு.கவில் இருந்து ஒதுங்குவதாக தினகரனும் அறிவித்து இருக்கிறார்.

இதைத்தொடர்ந்து பிரிந்து இருக்கும் அ.தி.மு.க.வின் இரு அணிகளும் இணைவதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

அ.தி.மு.க. இரு அணிகள் இணைவது குறித்த ஆலோசனை கூட்டம் சென்னை அடையார் கிரீன்வேஸ் சாலையில் உள்ள ஓ.பன்னீர்செல்வம் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணி அளவில் நடைபெற்றது. இதில், ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவருடைய அணியை சேர்ந்த மூத்த நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில், அ.தி.மு.கவை இணைப்பதற்காக அ.தி.மு.க. அம்மா கட்சியினர் அமைத்துள்ள குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் 5 அல்லது 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இந்த குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை முதல் அ.தி.மு.க. அம்மா கட்சி குழுவினரிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அ.தி.மு.கவை இணைக்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று தகவல் வெளியாகி உள்ளது.

சமரசப் பேச்சுவார்த்தையின் போது இரு அணியினரும் பல்வேறு நிபந்தனைகளை முன் வைக்க உள்ளனர். ஓ.பன்னீர்செல்வத்துக்கு முதலமைச்சர் பதவியை வழங்க வேண்டும் என்று அவருடைய அணியினர் தீவிரமாக உள்ளனர். அதேவேளையில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு முதலமைச்சர் பதவி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், எடப்பாடி பழனிச்சாமி தான் முதலமைச்சராக நீடிப்பார் என்றும் அ.தி.மு.க. அம்மா கட்சியினர் உறுதியாக உள்ளனர்.

கட்சி ஒன்றாக இணைந்த பின்னர் ஜெயலலிதா உயிரோடு இருந்த காலத்தில் ஒற்றுமையாக இருந்தது போன்று அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும். கோஷ்டி மனப்பான்மை வரக்கூடாது என்பதில் அ.தி.மு.க. அம்மா கட்சி குழுவினர் தனிக்கவனம் செலுத்தி உள்ளனர்.

அ.தி.மு.க. இரு அணிகளை சேர்ந்த தலைவர்களும் இன்று பேச்சுவார்த்தை தொடங்க உள்ள அதேவேளையில், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், ஓ.பன்னீர்செல்வமும் சந்தித்து பேச ஏதுவான சூழல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு இருவரும் சந்தித்து பேசினால் சுமுகமான முடிவு எடுக்கப்பட்டு அ.தி.மு.க. இணைப்பு உடனடியாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அ.தி.மு.க. இரு அணிகளும் இணைவது தொடர்பான பேச்சுவார்த்தையின்போது அ.தி.மு.க. (அம்மா). கட்சி குழுவினரிடம், ஓ.பன்னீர்செல்வம் அணி தரப்பில்,

* எம்.ஜி.ஆர்.வகுத்து தந்த அ.தி.மு.க. சட்டத்திட்ட விதிகளின் படி கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் மூலம் தான் அ.தி.மு.க. பொதுச்செயலாளரை தேர்வு செய்ய வேண்டும். எனவே அ.தி.மு.க. பொதுச்செயலாளர் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை தொடங்க வேண்டும். அதுவரையில் 7 பேர் கொண்ட குழுவை அமைத்து கட்சியை வழிநடத்தி செல்ல வேண்டும்.

* ஜெயலலிதா மரணம் குறித்து ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும்.

* சென்னை போயஸ் கார்டனில் ஜெயலலிதா வாழ்ந்த 'வேதா' இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவு இல்லம் ஆக்க வேண்டும்.

* ஜெயலலிதா தனக்கு பதிலாக ஓ.பன்னீர்செல்வத்தை தான் முதலமைச்சராக தேர்ந்தெடுத்தார். எனவே ஓ.பன்னீர்செல்வத்துக்கு முதலமைச்சர் பதவியை வழங்க வேண்டும். துணை முதலமைச்சர் பதவியை எடப்பாடி பழனிச்சாமி ஏற்றுக்கொள்ள வேண்டும். நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை பொறுப்பை அவரே வைத்துக் கொள்ளலாம்.

* எம்.எல்.ஏ.க்கள் செம்மலை, மாபா பாண்டியராஜனுக்கு அமைச்சரவையில் இடம் தர வேண்டும்.

* பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய வேண்டும்.

• மேற்கண்ட கோரிக்கைகளை ஓ.பன்னீர்செல்வம் அணியினர் வலியுறுத்தவுள்ளதாக தெரியவருகிறது. (இ-3)

# ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்துக்கு மீண்டும் வித்திட வேண்டாம்

## மத்திய அரசுக்கு மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை



இந்திய தேசத்தை ஹிந்தி தேசமாக்கி ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு மீண்டும் வித்திட வேண்டாம் என்று மத்திய அரசுக்கு மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சிகளை ஆட்சிக்கு வந்த நாளில் இருந்தே மத்திய பா.ஜ.க. அரசு மேற்கொண்டு வருகிறது. இந்திய மண்ணில் பல மதத்தை சார்ந்தவர்களும், பல மொழிகளை பேசுவோரும் ஒன்றுபட்டு வாழ்ந்து வருகிறார்கள். இதற்கு வேட்டு வைக்கும் வகையில், ஹிந்தி -சமஸ்கிருத திணிப்பு முயற்சிகளை பா.ஜ.க. அரசு மேற்கொள்கிறது.

அதன் ஒரு பகுதியாக மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் ஹிந்தியில் பேசவோ, எழுதவோ தெரிந்திருந்தால் தங்களது உரையையும் அறிக்கையையும் ஹிந்தியில்தான் கொடுக்க வேண்டும் என்கிற பாராளுமன்ற குழுவின் பரிந்துரைக்கு ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

விமான நிலைய அறிவிப்புகள், பத்திரிகை விளம்பரங்கள் என பலவற்றிலும் ஹிந்தியை பரவச் செய்யும் அம்சங்களுக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்திருப்பதுடன், சி.பி.எஸ். பாடசாலைகளில் ஹிந்தி மொழி கட்டாயம் என்ற நிலையும் உருவாக் கப்பட்டுள்ளது. அரசு திட்டங்களுக்கான பெயர்கள் அனைத்தும் ஹிந்தி அல்லது சமஸ்கிருதத்திலேயே சூட்டப்படுகின்றன.

இந்தியாவில் வாழும் அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என்கிறது அம்பேத்கர் வகுத்து தந்த அரசியல் சட்டம். ஆனால், ஹிந்தி மொழிக்கு மட்டும் முதலிடம் கொடுத்து, ஏனைய மொழிகள்பேசும் இந்திய மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக்கும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியிருப்பது கண்டனத்திற்குரியது.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மைல்கற்களில் இணைப்பு மொழியான ஆங்கிலத்தை அகற்றி விட்டு ஹிந்தியில் எழுதும் வேலையை மேற்கொண்ட மத்திய அரசு, பாராளுமன்றம் தொடங்கி, பாடசாலைகள் வரை ஹிந்தி மொழியை திணிக்க ஜனாதிபதி ஒப்புதலை பெற்றிருப்பது இந்தியாவில் பிற மொழி பேசும் மக்களுக்கு [illegible] என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# பொதுமக்கள் எங்களை குற்றவாளியாக பார்த்தனர்

## அமைச்சர் கே.சி.வீரமணி கவலை



(சென்னை)

சசிகலா அணியில் இருந்ததால் பொதுமக்கள் எங்களை குற்றவாளியாக பார்த்தனர் என வேலூரில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் கே.சி. வீரமணி கவலையுடன் தெரிவித்தார்.

வேலூர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. செயல்வீரர் மற்றும் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் ஜோலார்பேட்டையில் உள்ள ஆர்.எஸ். திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்தில் அமைச்சர் கே.சி.வீரமணி தெரிவிக்கையில்,

ஜெயலலிதா இறந்த பிறகு கட்சியிலும், ஆட்சியிலும் பல்வேறு பிரச்சினைகள் நிகழ்ந்தன. தொகுதி மக்களையும், கட்சி தொண்டர்களையும் நான் எப்படி பார்ப்பேன் என இருந்தேன்.

வேலூர் மாவட்டத்தில் தொண்டர்களும், நிர்வாகிகளும் என்னை குற்றவாளியாக பார்த்தார்கள். எந்த ஒரு சுபநிகழ்ச்சி மற்றும் துக்க நிகழ்ச்சிக்கு கலந்து கொள்ள யாரும் அழைக்காத நிலையில் நான் மிகவும் வருத்தப்பட்டேன். தொண்டர்களை நாங்கள் அழைத்தும் அவர்கள் சந்திக்க வர மறுத்தார்கள். இந்நிலையில் நான் சசிகலா தரப்பிடம் எங்கள் மாவட்டத்தில் யாரும் உங்களுக்கு ஆதரவு தர மாட்டார்கள். தொகுதி மக்களும், கட்சி தொண்டர்களும் உங்களை ஏற்க தயாராக இல்லை என தைரியமாக கூறினேன்.

சசிகலா, நடத்திய நாடகம் தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் நன்கு தெரியும். அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து இந்த குடும்பத்தை அகற்ற வேண்டும் என திட்டமிட்டு தற்போது குடும்ப அரசியலை விரட்டியுள்ளோம்.

மத்திய அரசு அ.தி.மு.க. அரசை கலைக்க திட்டம் தீட்டியது. எம்.ஜி.ஆர். காலத்தில் உருவான அ.தி.மு.கவை யாராலும் பிரிக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது. ஒரு குடும்பத்திற்காக ஆட்சியை இழக்க நாங்கள் விரும்பவில்லை. அதனால் தான் அந்த குடும்பத்தை நாங்கள் ஒதுக்கி வைத்தோம். கட்சி பிரிவு என்பது அண்ணன், தம்பி சண்டை போன்றது. இதை நாங்கள் சரிசெய்து கொள்வோம். 10 பேர் கொண்ட குழு அமைத்து, இனிவரும் காலங்களில் கட்சியையும், ஆட்சியையும் வழி நடத்துவது குறித்து முடிவு எடுப்போம். நிச்சயமாக குடும்ப அரசியலை விரட்டி அ.தி.மு.கவை ஒருங்கிணைத்து இரட்டை இலையை மீட்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வேண்டாம்; வடகொரியாவிடம்
# அமெரிக்கா பகிரங்க வேண்டுகோள்

(வோஷிங்டன்)

**இரு நாடுகளுக்கும் இடையே போர் வேண்டாம் என்று வட கொரியாவிடம் ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**




வடகொரியா கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டு வருகிறது. இதுவரை 5 முறை அணுகுண்டு சோதனைகளையும், எண்ணற்ற முறை ஏவுகணை சோதனைகளையும் நடத்தி உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

ஐ.நா. சபையும் அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளபோதும், வடகொரியா தொடர்ந்து தனது சோதனையை செய்து வருகிறது. இந்நிலையில், 6 ஆவது முறையாக அணுகுண்டு சோதனை நடத்த வடகொரியா தயாராக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் வட கொரியாவை கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப். முடிவெடுத்து செயற்பட்டு வருகிறார். இதற்காக அவர் இராணுவ நடவடிக்கை எடுக்கவும் தயாராக உள்ளார். அவரது உத்தரவின்பேரில் தென் கொரியாவுக்கு, அமெரிக்காவின்வலிமை மிகுந்த போர்க்கப்பல்களும், வீரர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனால் வடகொரியா - அமெரிக்கா இடையே போர் மூளும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

வடகொரியாவும், அமெரிக்காவின் எந்தவித போருக்கும் பதிலடி கொடுக்கத் தயாராக இருப்பதாக கூறி வருகிறது. இந்நிலையில், அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே, அமெரிக்கா எந்த ஒரு போருக்கும் முயற்சி எடுக்கவில்லை என்று கூறியுள்ளார். எனவே எந்தவித போர் பதற்றத்தையும் உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கடைசியாக வட கொரியா சோதித்த ஏவுகணை தோல்விகுறித்து ஐ.நா. உறுப்பினர்கள் அறிக்கை தயார் செய்து வருவதாகவும் தெரிவித்தார். இந்நிலையில், வடகொரியாவின் அணுகுண்டு சோதனை திட்டம் குறித்து ஏப்ரல் 28இல் பாதுகாப்பு குழு ஆலோசனை கூட்டத்தை நடத்த அமெரிக்க அரசின்செயலாளர்ரெக்ஸ் ஹில்லர்சன் அழைப்பு விடுத்துள்ளார். (இ-3)

## ஆங்கிலம் கற்க சசிகலா விருப்பம்

(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் இருக்கும் சசிகலா ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற விருப்பத்தில் உள்ளார். ஆங்கிலம் கற்பதற்காக சிறையில் ஒரு ஆசிரியரை அனுப்பிவைக்குமாறு அவர் பெங்களூர் மத்திய சிறை அதிகாரியிடம் மனு கொடுத்து இருப்பதாக கூறப்படுகிறது.

சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டு சிறைத் தண்



டனை பெற்ற சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய 3 பேரும்பெங்களூர்பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பல மொழிகளில் பேசக்கூடிய திறமை உடையவர். ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடியவர். அவரது நெருங்கிய தோழியான சசிகலாவுக்கு ஆங்கிலம் பேசும் ஆற்றல் இல்லை.

இதனால் பெங்களூர் சிறையில் இருக்கும் சசிகலா ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற விருப்பத்தில் உள்ளார்.

ஆங்கிலம் கற்பதற்காக சிறையில் ஒரு ஆசிரியரை அனுப்பி வைக்குமாறு சசிகலா பெங்களூர் மத்திய சிறை அதிகாரியிடம் மனு கொடுத்து இருப்பதாக கூறப்படுகிறது.

தனது ஆங்கில மொழி ஆற்றலை வளர்த்துக்கொள்ள அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

சசிகலா கோரிக்கையை ஏற்று ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக சிறைத்துறை அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். (இ-3)

### ஜனாதிபதி பதவியேற்பு விழாவுக்காக
## ரூ.706 கோடி நன்கொடை திரட்டி டொனால்ட் ட்ரம்ப் புதிய சாதனை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பு விழாவுக்காக ரூ.706 கோடி நன்கொடை திரட்டி புதிய சாதனை படைத்துள்ளார். இது கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா திரட்டியதைப் போல் 2 மடங்கு அதிகம்.

ட்ரம்பின் பதவியேற்பு விழாவுக்காக நன்கொடை வழங்கியவர்கள் குறித்த விபர அறிக்கையை ட்ரம்பின் பதவியேற்பு விழாக் குழுவினர் மத்திய தேர்தல் ஆணையத்தில் நேற்றுத் தாக்கல் செய்தனர்.

எனினும் நன்கொடை நிதி எவ்வாறு செலவிடப்பட்டது என்ற விப ரத்தை அக் குழுவினர் வெளிப் படையாக தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதுதொடர்பாக விழாக் குழுவினர் வெளி



யிட்ட அறிக்கையில், "சமீப கால வரலாற்றில் பொது மக்கள் மிகவும் எளிதாக பங்கேற்கும் வகையில் நடைபெற்ற ஜனாதிபதி பதவியேற்பு விழாக்களில் ஒன்றாக ட்ரம்பின் பதவியேற்பு விழாவும் அமைந்திருந்தது. குறிப்பாக, நாட்டின் முன்னணி தொழிலதிபரான ட்ரம்பின் பதவியேற்பு விழா, ஏனைய ஜனாதிபதிகளின் விழாக்களைவிட எளிமையாக நடைபெற்றது" என கூறப்பட்டுள்ளது. (இ-3)

## விஷவாயுத் தாக்குதலின் பின்னணியில் டமாஸ்கஸ்
### ஆதாரத்தை வெளியிடப்போவதாக பிரான்ஸ் அறிவிப்பு



(பாரிஸ்)

சிரியா விஷவாயு தாக்குதலின் பின்னணியில் டமாஸ்கஸ்இருப்பதாகவும், அதற்கான ஆதாரத்தை விரைவில் வெளியிடப்போவதாகவும் பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

சிரியாவில் அரசுக்கு எதிராக செயற்படும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் தீவிர வாதிகளை குறிவைத்து அரசுக்கு ஆதரவான விமானப் படையின் போர் விமானங்கள் கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி இரசாயன ஆயுதங்களை வீசி தாக்குதல் நடத்தியது.

இட்லிப் மாகாணத்தின் மத்திய பகுதியில் உள்ள கான் ஷெய்க்குன் நகரில் போராளிகள் வாழும் பகுதியில் நடத்தப்பட்ட இந்த விஷவாயுத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 100 பேர் உயிரிழந்தனர். மேலும் 400இற்கும் மேற்பட்டோர் விஷவாயுவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா மனித உரிமைகள் கண்காணிப்பகம் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த விஷவாயு தாக்குதலுக்கு ரஷ்ய மற்றும் சிரிய இராணுவம் தான் காரணம் எனவும் குற்றம் சாட்டியுள்ளது. குளோரின் விஷ வாயுவை பீப்பாயில் அடைத்து சிரியா இராணுவம் ஹெலிகொப்டர் மூலம் வீசியதாக இந்த தாக்குதல் தொடர்பாக ஐ.நா. சபை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சிரியா விஷவாயு தாக்குதலின் பின்னணியில் டமாஸ்கஸ் ஈடுபட்டிருப்பதாக பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது. மேலும் வரும் நாட்களில் சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆதாரத்தையும் பிரான்ஸ் அரசு சமர்ப்பிக்க உள்ளதாகவும் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன்-மார்க் ஜரால்ட் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தான் காரணம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தமிழக விவசாயிகளின் போராட்டம் இடைநிறுத்தம்




(டில்லி)

டில்லியில்37ஆவதுநாளாக நடைபெற்று வரும் தமிழக விவசாயிகளின் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அய்யாக்கண்ணு தெரிவித்துள்ளார்.

விவசாயக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டில்லி ஜந்தர் மந்தரில் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் நடைபெற்று வரும் [illegible] கும் விதமாக விவசாயிகள் தினமும் நூதன முறையில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பிரதமர் மோடி விவசாயிகளை சாட்டையால் அடிப்பது போன்ற போராட்டத்தை யும் நடத்தினர்.

விவசாயிகளின் போராட் [illegible] இளைஞர்கள், [illegible] என பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். நேற்று முன்தினம் சட்டையை கிழித்துக் கொண்டு போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் விவசாயிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது விவசாயிகள் போராட்டத்தை கைவிடும்படி கேட்டுக்கொண்டார். இதையடுத்து விவசாயிகளுடன் போராட்டக்குழுத் தலைவர் அய்யாக்கண்ணு ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், தங்களது போராட்டத்தை 2 நாட்கள் தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாங்கள் போராட்டத்தை வாபஸ் பெறவில்லை. மாறாக 2 நாட்கள் போராட்டத்தை ஒத்திவைத்துள்ளோம் என்றார். அரசு எழுத்துபூர்வ உறுதிமொழி அளிக்கும் வரை காத்திருப்போம் என்றும் அய்யாக்கண்ணு தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் டில்லிப் பயண நாட்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

## இந்திய ஊடகம் தகவல்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் டில்லிக்கான பயண நாட்கள் குறித்த ஒழுங்குகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று டில்லி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருதரப்பு உறவுகளை மீளாய்வு செய்யும் நோக்கில் இந்த மாத இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

டில்லியிலுள்ள அதிகாரிகள், பிரதமரின் பயணம் இடம்பெறவுள்ளதை உறுதி செய்திருந்தனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொழும்புப் பயணத்துக்கு முன்னதாக, பிரதமரின் இந்தியப் பயணம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் கொழும்பு வரும்போது, இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடுவது தொடர்பான இறுதிக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே ரணில் விக்கிரமசிங்கவின் டில்லிப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஏப்ரல் மாத இறுதியில் இந்தப் பயணம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், பயண நாட்கள் தொடர்பாக இன்னமும் இறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று டில்லி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு பிரதமராகப் பதவியேற்ற பின்னர், ரணில் விக்கிரமசிங்க டில்லிக்கு மேற்கொள்ள விருக்கும் மூன்றாவது பயணம் இதுவாகும். ஏற்கனவே அவர் 2015 செப்டெம்பரிலும் 2016 ஒக்டோபரிலும் டில்லிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குப்பை அனர்த்தம் தொடர்பில் விவாதிக்க பாராளுமன்றத்தை கூட்டுங்கள்- தினேஷ்



(கொழும்பு)

மீதொட்டமுல்ல அனர்த்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்துமாறு கூட்டு எதிர்க்கட்சி சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அக்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன இந்த வேண்டுகோளை சபாநாயகரிடம் விடுத்துள்ளார்.

அனர்த்த அகோரம் காரணமாக இந்த விவாதத்தை நடத்துமாறு தாம் வேண்டியதாகவும் பிரதமர் சபாநாயகருக்கு இதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனவும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொறுப்புக்கூறலை செய்யாவிடின் பயங்கரமான விளைவுகள் ஏற்படும்

## சிவில் சமூகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கிய ஜெனிவா தீர்மானத்துக்கு அமைவாக, மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும் என்று சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த அகலங்க ஹெட்டியாராச்சி கருத்து வெளியிடுகையில்,

"போரின் போதும் போருக்குப் பின்னரும் குற்றங்களை இழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போரின் போது கொடுமைகளை செய்த படையினரைக் காப்பாற்றுவதற்கு விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் முயற்சிக்கின்றனர்.

பொறுப்புக்கூறல் விவகாரங்கள் சரியாகத் தீர்க்கப்படாவிட்டால் பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டவர்கள் என்பதற்காக குற்றமிழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கக் கூடாது.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தகாத வார்த்தைகளால் நான் திட்டியதில்லை ரணிலின் நடவடிக்கை குறித்து மகிந்த கவலை

என்னுடைய ஆட்சியில் நான் யாரையும் தகாத வார்த்தைகளால் திட்டியதில்லையெனவும் இந்த அரசாங்கத்தில் அமைச்சரவையில் வைத்து பிரதமர் அமைச்சர்களுக்கு தகாத வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற புத்தாண்டு விளையாட்டுப் போட்டி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இவ்வாறான ஏச்சு இந்த குருநாகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கே கிடைத்துள்ளதாகவும் பதவி, அதிகார மோகத்தில் இவ்வாறான விடயங்களைக் கூட பொருட்படுத்தாது செயற்பட்டு வருவதாகவும் மகிந்த ராஜபக்ஷ எம்.பி. சுட்டிக்காட்டினார். (இ-7)

# சிகரெட் கம்பனி வதந்தியை பரப்பியது அரச வைத்திய அதிகாரிகள் சங்கமே

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நவீன் சொய்ஷா விடுக்கும் அறிவிப்புக்களையும் அவரது நடவடிக்கைகளையும் பார்க்கும் போது அவருக்கு பொருத்தமான பதவி, வைத்தியர் பதவி அல்லவெனவும் வனத்துறை அமைச்சில் ஒரு தொழிலே எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சருக்கு, வனத்துறை அமைச்சை வழங்க வேண்டும் என வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நவீன் சொய்ஷா தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கைக்குள் மற்று [illegible] கம் தயாராகி வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ள கருத்து, முற்றிலும் பொய்யானது எனவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பழிசைக் கிளறுவதே பழிக்கம்

என் இளவயதில் பாடசாலை விடுமுறை நாட்களில் நான் வீடு தங்குவது கிடையாது. எங்காவது உறவினர்- நண்பர்கள் இருக்கும் ஊர்களுக்குப் போய்விடுவது உண்டு (பெற்றோரின் அனுமதியுடன் தான்).

சில இடங்களில் இனிமையான சூழ்நிலைகள்; கவனிப்புகள். சில இடங்களில் சில நேரங்களில் கல்லில் உளி கொண்டு எழுதின மாதிரி; சில மாறான, கசப்பான நிகழ்ச்சிகள்.

போன இடங்களில் நான் எடுபிடியாக நடத்தப்பட்டு இருக்கின்றேன். கடுமையாக வேலை வாங்கப்பட்டால் கூடப் பரவாயில்லை. ஒரு சிறுவன் செய்யத் தராதரமற்ற பணிகள் என்னிடம் தரப்பட்டன, விருந்தினருக்குத் தரப்பட வேண்டிய உணவும் தரப்படுவதில்லை. பழங் கஞ்சியும் மிகப் பழைய இட்டிலியும்... சமமாக நாற்காலியில் உட்காரக்கூட அனுமதிக்கப்பட்டதில்லை. சில நேரங்களில் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் இடங்களில் நிற்கக் கூட எனக்கு அனுமதி இல்லை. துரத்தப்பட்டேன், திட்டும் வசவும் நிமிடத்திற்கு நிமிடம் கிடைக்கும்.

புரண்டவை காலங்கள் மட்டுமல்ல; சூழ்நிலைகளும் கூட; என்னை எப்படியெல்லாம் கேவலமாக நடத்தினீர்கள் என்று உரத்த குரலில் கேட்கும் நிலை இப்போது.

என்னை அப்படி நடத்தியவர்கள்; நான் அவற்றையெல்லாம் மறந்துவிட்டதாக நினைக்கக்கூடும். ஆனால் அதில் உண்மை இல்லை. மாறாக, உன்னை இப்படி நடத்தியவர்களை நீ விடாதே! நாலு வார்த்தை நல்லாக் கேளு என்று எனக்கு நினைவூட்டியபடியும் தூண்டியபடியும் சிலர் இருக்கிறார்கள். காரணம், நடந்தவை இவர்களுக்குத் தெரியும்.

ஆனால் நான் பழையவற்றைக் கிளற விரும்பவில்லை. இன்றைக்கு என்னை அவர்கள் முன்பு நடத்தியதற்கு நேர்மாறாக நடத்துகிறார்களே, அல்லது நடத்தும்படி நடந்து கொண்டேனே, அதைத் தான் வெற்றியாக நினைக்கிறேன். பிறர் தூண்டியது போல் நடந்து கொண்டு, அவர்களை முகம் சுருங்கச் செய்து என்னை விட்டு விலகிப் போகச் செய்வதை நான் வெற்றியாகக் கருதவில்லை.

யானையைப் போல கரங்கட்டிக் கொண்டு காலங்காலமாகப் பழிவாங்கச் சந்தர்ப்பம் பார்த்திருப்பது நிலைமையை மோசமாக்கவே செய்யும்.

சில பெண்களுக்குச் சிறு வார்த்தைகளும் சில சம்பவங்களும் அப்படியே நினைவில் இருக்கும். "சந்தர்ப்பம் வரட்டும். நல்லா கேட்டு விடுகிறேன்" என்று காத்திருப்பார்கள். பல வருடங்களுக்கு முன்பு நடந்ததை நேற்று நடந்ததைப் போல் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே ஒப்பிப்பார்கள். சம்பவங்களையெல்லாம் கோர்வையாக – ஒரு மிகச் சிறந்த கதாசிரியையைப் போல சொல்வார்கள்.

சிறுபிள்ளைகள் சண்டைபிடித்துக் கொள்ளும் போது "டேய் நான் போன வாரம் கொடுத்தேனே அதை வயித்தைக்கிழிச்சுக் குடுடா!" என்று கேட்பது போல் பெரியவர்களும் நடந்து கொள்வது அறிவீனம். ஒரு மனிதனை நினைக்கும் போது அவனிடம் உள்ள நல்ல அம்சங்களை நினைவில் நிறுத்துவது தான் இருவருக்குமே நல்லது.

ஐந்து நிமிடத்திற்கு முன்பு சாவியை வைத்துவிட்டு எங்கு வைத்தோம் என்று நினைவில் நிறுத்த முடியாதவர்கள், ஆண்டுக் கணக்கில் பழையவற்றை – அதுவும் எதிர்மறையான விடயங்களை நினைவில் வைத்துக் கொள்வது வருந்தத்தக்க அம்சம்.

அழுகிப்போன விடயங்களைப் புதையுங்கள். அவற்றையே உரமாக்கி, நல்ல உணர்வுகளை விதைத்து உருப்படியான விடயங்களைப் பயிராக்குங்கள்.

ஞாபகம் வைத்துக் கொள்ள எவ்வளவோ நல்ல விடயங்கள் இருக்க, இவையெல்லாம் ஏன்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# மாதிரி வினாத்தாள் -பகுதி 1

வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16.

| | | | |
|---|---|---|---|
| ...... | 2 | 1 | 8 |
| 3 | 3 | 2 | 18 |
| 2 | 4 | ...... | 24 |
| 24 | 24 | 6 | |

1) 2,3  2) 4,3  3) 2,4

17.

| | | | |
|---|---|---|---|
| 6 | 4 | 4 | 40 |
| 3 | ...... | 1 | 5 |
| ...... | 3 | 4 | 20 |
| 18 | 18 | 20 | |


1) 2,2  2) 4,3  3) 3,1

18.

| | |
|---|---|
| க | ர |
| நீ | ரீ |
| ள் | ..... |

1) ய்  2) ப்  3) ர்


19. பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு சதுரமுகி உள்ளது. அது விரிக்கப்படும் போது தோற்றும் விதம் யாது?




20. கடன், பிணி, கவலை, நோய், துயரம், துன்பம், வேதனை என்பனவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவுசெய்க.
1. கடன்  2. பிணி  3. வேதனை


21. கவி, பாடல், ஆடல், கவிஞர், பிதா, பாட்டு, நடனம், பாடகர், எழில், புலவர் என்பனவற்றில் பொருந்தாத சொற்சோடியைத் தெரிவு செய்க.
1. நடனம், புலவர்  2. பிதா, எழில்  3. கவிஞர், நடனம்


22. உருவில் உள்ள A,B,C,D,E என்னும் ஐந்து சதுரங்கள் ஒன்றையொன்று ஒத்தவை. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 12 சதுர சென்ரிமீற்றர்கள் ஆகும். முழு உருவத்தினதும் பரப்பளவு பற்றிய சரியான கூற்று யாது?




1. 36 சதுர சென்ரி மீற்றரிலும் குறைவாகும்.
2. 36 சதுர சென்ரி மீற்றர் ஆகும்.
3. 36 சதுர சென்ரி மீற்றரிலும் கூடியதாகும்.

23. இவ்வடிவத்தைப் AB, CD எனும் புள்ளிகள் வழியே மடிக்கும் போது கிடைக்கும் உரு யாது?




1.  2.  3.

24) 2,3,4,6 ஆகியவற்றுக்குப் பதிலாக K,L,M,N என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்தி வினாவப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்து எது?
K x N = L x ................  1. M  2. L  3. N


25. N + M இற்கு சமனான கணிப்பு எது?
1. L + M + K  2. N - K x M  3. M x L - K

♦ பாடசாலையின் விளையாட்டு நிகழ்வில் மூன்று இல்ல வீரர்களுக்கு பின்வரும் நிறங்களும் வடிவங்களும் கொண்ட இலச்சினைகள் வழங்கப்பட்டன.
சேரர் இல்லம் = சிவப்பு, சோழர் இல்லம் = மஞ்சள், பாண்டியன் இல்லம் = பச்சை
ஆண்கள் = வட்டம், பெண்கள் = சதுரம்.

26. சோழர் இல்ல ஆண்பிள்ளைகளுக்குக் கிடைத்துள்ள இலச்சினை எது?




27.





இவ்விலச்சினை யாருக்குக் கிடைத்தது?

1. சோழர் - பெண்  2. சேரர் - பெண்  3. பாண்டியன் - ஆண்

இவ்வுருவுடன் தொடர்புபட்ட கூற்றுக்களைத் தெரிவு செய்க.

28. குடை மட்டும் பிடித்திருந்தோர் யாவர்?




1. A,B,C,D
2. A,D,F,I
3. A,C,D,F,G,I,J

29. தொப்பி அணிந்து குடை பிடித்திருந்தோர் யாவர்?
1. H, B, E  2. G, C, J  3. A, F, D, I

30. இவ்வுருக்களில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 7  2)6  3)10


31. பின்வரும் கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?
A. உலகினை ஒன்று சேர்க்க
B. பிறந்த பத்திரிகைப் பெண்ணே
C. ஊரினை நாட்ட இந்த
D. பேரறிவாளர் நெஞ்சிற்
1. C,A,D,B  2 C,A,B,D  3. B,D,C,A

32. ஒரு மாணவன் கவிதை போட்டிக்காக 10 நாட்கள் செலவு செய்து சிறந்த கவிதை ஒன்றை ஆக்கினான். அவன் 5ஆம் திகதி திங்கட்கிழமை கவிதை எழுதத் தொடங்கினால் எப்பொழுது முடித்திருப்பான்.
1) 14ஆம் திகதி புதன்கிழமை  2) 15 ஆம் திகதி வியாழக்கிழமை  3) 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

33. உமது பாடசாலை புதிய கட்டடம் ஒன்று 2000 ஆம் ஆண்டு கட்டத்தொடங்கி 2006 ஆம் ஆண்டு இறுதியில் கட்டி முடிக்கப்பட்டது. கட்டடம் கட்டச் செலவான வருடங்கள் எத்தனை?
1) 6 வருடங்கள்  2) 7 வருடங்கள்  3) 8 வருடங்கள்

34. ஓர் இடத்தில் இருந்து எதிர் எதிர் திசையில் நடக்க ஆரம்பித்த இருவர் முதலில் 10 மீற்றர்கள் சென்று தத்தமது வலதுபக்கங்கள் திரும்பி 10 மீற்றர்கள் சென்று மீண்டும் தத்தமது வலது கைப்பக்கம் திரும்பி 10 மீற்றர்கள் சென்று நின்றார்கள். தற்பொழுது அவர்கள் இருவருக்கும் இடையிலான தூரம் யாது?
1) 10 மீற்றர்கள்  2) 20 மீற்றர்கள்  3) ஆரம்பித்த இடத்திற்கு வந்துவிட்டார்கள்

35. மேலுள்ள வினாவில் நடந்த இருவரதும் வழிப்பாதைகளைக் காட்டும் வரிப்படம் எது?




36. எண் சோடிகளில் முதலாவது எண்ணை இரண்டாவது எண்ணுடன் கூட்டும் போது அல்லது பெருக்கும் போதும் ஒரே விடையைத் தரக்கூடிய எண்சோடி யாது?
1) 4, 4  2) 1, 2  3) 2, 2

37. எண்சோடிகளில் முதலாவது எண்ணை இரண்டாவது எண்ணுடன் கூட்டும் போது கிடைக்கும் விடையைவிட பெருக்கும் போது கிடைக்கும் விடை பெறுமானம் அதிகமானதைத் தரும் எண் சோடி எது?
1) 4, 4  2) 1, 2  3) 2, 2

38. எண்சோடிகளில் முதலாவது எண்ணை இரண்டாவது எண்ணுடன் கூட்டும் போது கிடைக்கும் விடையைவிட பெருக்கும் போது கிடைக்கும் விடை பெறுமானம் குறைவானதைத் தரும் எண்சோடி எது?
1) 4, 4  2) 1,2  3) 2, 2

39. கபிலன் படம் ஒன்றினைப் பார்த்து பின்வருமாறு கூறினான் "இப்படத்தில் இருப்பவளின் தாய் எனது மகளின் தாய் ஆவாள்" அப்படியானால் படத்தில் காணப்படுபவள் கபிலனுக்கு என்ன உறவுமுறை ஆகும்?
1. மகள்  2. மருமகள்  3. மனைவி

## 12-04-2017, 19-04-2017 ஆகிய திகதிகளில் வெளியான பகுதி- 1 வினாத்தாளின் விடைகள்

1) 2
2) 1
3) 3
4) 2
5) 3
6) 1
7) 3
8) 1
9) 2
10) 3
11) 1
12) 1) C,E- பறவைகள்
2) A,G- தரைவழிப் போக்குவரத்து வாகனங்கள்
3) B,H-மனிதர்களின் அணிகலன்
13) A யும் C யும்
14) 2
15) 1
16) 3
17) 2
18) 1
19) 2
20) 1
21) 2
22) 1
23) 2
24) 1
25) 9
26) 11
27) 9
28) 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.

> "கூழானாலும் குளித்துக் குடி", "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" போன்ற பழமொழிகள் நாம் உடற்சுத்தத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன அல்லவா? வெளியிடங்களுக்குச் சென்று வருவதனால் ஏற்படும் களைப்பை நீக்கி மனத்திற்கும் உடலுக்கும் உற்சாகத்தைத் தரும் இடம் நாம் வாழும் இல்லங்களே. இந்த இல்லங்கள் சுத்தமானவையாகவும் காற்றோட்டமுடையனவாகவும் சூரிய ஒளியைப் பெறுவனவாகவும் இருத்தல் மிகவும் அவசியமாகும். அப்பொழுது தான் நோய் நொடிகளிலிருந்து நாம் விடுதலை பெற்று வாழலாம்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

01. எமது மனதிற்கும் உடலுக்கும் உற்சாகத்தைத் தரும் இடம் எதுவென பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?..............................

02. இப்பந்தியில் இடம்பெறும் முதுமொழிகள் இரண்டை எழுதுக
..............................

03. வீடுகள் காற்றோட்டமுடையதாகவும், நன்கு சூரிய ஒளி பெறுவதற்கும் அவசியமானவை எவை?..............................

04. களைப்பு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
..............................

05. இப்பந்தியில் இடம்பெறும் இணைமொழிச் சொல்லை எழுதுக.
..............................

06. சரியான முறையில் அம்புக்கோட்டினால் தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| தூய காற்று | வாழ்வதற்கு |
| தூய நீர் | உண்பதற்கு |
| தூய உணவு | சுவாசிப்பதற்கு |
| தூய சூழல் | அருந்துவதற்கு |

கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

07. விறகு வியாபாரி ................யால் மரங்களைத் தறித்து வீழ்த்தினான்.( கோடாலி / கோடரி )

08. இலங்கையர் வீட்டுக்கு வரும் விருந்தாளியை .............................. வழங்கி உபசரிப்பர். ( தேனீர் / தேநீர் )

09. வீரன் மீது எவரும் ...................... கொள்ள மாட்டார்கள். (அழுக்காறு / அளுக்காறு)

பின்வரும் கூற்று சரியெனில் ( ✓) எனவும், பிழையெனில் (X) எனவும் அடைப்பினுள்ளே அடையாளம் இடுக.

10. அக்காமார் உயர்திணை, பெண்பால், பன்மை, படர்க்கை, பெயர்ச்சொல் (.............)

11. விழுந்தன என்பது அஃறிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை, முற்றுவினைச்சொல் (............. )

வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

12. தமிழ் மொழியில் .......................... மெய்யெழுத்துக்கள் உள்ளன. ( 12, 18, 216 )

13. பஞ்சசரி எனப்படும் சபரி அம்மையைப் பற்றிய கதை ................................... வருவதாகும். (இராமாயணத்தில், மகாபாரத்தில் )

14. கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும் எனும் கருத்தமைந்த பழமொழி.............................................................. ஆகும். ( பதறாத காரியம் சிதறாது, ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் )

15. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
தயவு செய்து உள்ளே வாருங்கள் ..............................

16. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
தயவு செய்து முன்னே செல்லுங்கள் ..............................

17. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.
1) BLA _ K 2) GRE _ N

18. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
மட்ட கிரி பொண்ட தென்ன
..............................

19. இக்கவிதையின் நாலாவது வரியை புள்ளிக் கோட்டில் எழுதுக.
இடர் வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் - மாந்தர்
..............................

20. காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிச் சிறு பொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்
இப்பாடலில் கூறப்படுபவர் யார்? ..............................

21. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண" என்னும் திருக்குறளைப் பூர்த்தி செய்க.
..............................

22. தேசிய இலச்சினை ஒரு நாட்டின் அடையாளச் சின்னமாகும். தேசிய இலச்சினை அந்நாட்டின் பெருமையையும் எடுத்துக் காட்டுகின்றது. இதனைத் தொடர்ந்து தேசிய இலச்சினை பற்றி நீர் அறிந்த விடயங்கள் தொடர்பான மூன்று வாக்கியங்கள் எழுதுக.
01..............................
02..............................
03..............................

23. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக.
23,342 ..............................

24. எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்களை உரோமன் இலக்கங்களிலும், இந்து அராபிய இலக்கங்களிலும் எழுதுக.

| | | உரோமன் இலக்கங்கள் | இந்து அராபிய இலக்கங்கள் |
|---|---|---|---|
| 1) | முப்பத்தாறு | | |
| 2) | எட்டு | | |
| 3) | இருபத்தொன்பது | | |
| 4) | ஒன்பது | | |

25. அடுத்து வரும் எண்களை அடைப்புக்களில் எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 4 | 7 | 10 | 13 | 16 | __ | __ | __ |
| 2) | 1 | 4 | 9 | 16 | 25 | 36 | __ | __ | __ |
| 3) | 1 | 3 | 6 | 10 | 15 | 21 | __ | __ | __ |
| 4) | 1 | 3 | 5 | 7 | 9 | 11 | __ | __ | __ |

26. பின்வரும் பின்னக் கணிப்புக்களைச் செய்க.


1) $\frac{1}{3} + \frac{1}{3} = .....$ 2) $\frac{2}{4} - \frac{1}{4} = .....$ 3) $\frac{1}{2} + \frac{1}{4} = .....$ 4) $\frac{5}{8} - \frac{1}{4} = .....$

27. பின்வரும் கலப்புப் பின்னங்களைத் தசம எண்களாக எழுதுக.

1) $3\frac{3}{10} = .....$ 2) $2\frac{2}{100} = .....$ 3) $1\frac{5}{10} = .....$ 4) $3\frac{23}{100} = .....$

28. புகையிரத நிலையத்திற்கு 15:40 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாக வருமென்று அறிவிக்கப்பட்டது. புகையிரதம் வர வேண்டிய நேரத்திற்கு 25 நிமிடங்கள் முன்பாக வந்த விமலன் புகையிரத நிலையத்தில் காத்திருந்த நேரத்தை மணித்தியால நிமிடங்களில் எழுதுக.
...................... மணித்தியாலம் .................... நிமிடங்கள்

29. மேலுள்ள வினாவின் படி விமலன் புகையிரத நிலையத்திற்கு வந்த நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதுக. ..............................

30. 


இவ்வுருவின் சுற்றளவை மில்லி மீற்றரில் எழுதுக. ..............................

31. ஒரு பாத்திரத்தில் 3 கிலோகிராம் 150 கிராம் சீனி உள்ளது. அதனை ஒன்பது சம பாத்திரங்களில் இட்டு நிரப்பப்பட்டன. ஒரு பாத்திரத்தில் உள்ள சீனியின் அளவு யாது?
..............................


32. ஒரு லீற்றர் பால் ரூபா 60/= படி 3.25 லீற்றர் பாலைக் கொள்வனவு செய்வதற்கு எவ்வளவு ரூபாய்கள் தேவை? ..............................

33. பழுதடைந்த பாணில் காணப்படக்கூடிய அடையாளத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக. ( பூஞ்சணம் பூத்திருத்தல் / நீலநிறமாக மாறியிருத்தல் )

34. பழுதடைந்த பாலில் காணக்கூடிய அடையாளத்தைத் தெரிவு செய்க. ( இனிப்புச்சுவை கூடியிருத்தல் / திரண்டு துண்டு துண்டாய்க் காணப்படல் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொலன்னாவை குப்பைமேடு சரிந்த அனர்த்தத்தில் உயிரிழந்த பொதுமக்களுக்கு சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அஞ்சலி செலுத்தினர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் சமமேளனத் தலைவர் சு.நக்கீரன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (படங்கள்:-கிஷோர்)

## மின்சாரப் பட்டியல் ,கடிதங்களால் குப்பை கொட்டிய கும்பல் மாட்டியது

(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் குப்பைகளைக் கொட்டிய பலர் குப்பைக்குள் இருந்த கடிதத் தலைப்புக்களின் மூலம்அகப்பட்டுக்கொண்டனர்.

மேற்படி பகுதிகளில்குப்பைகள் கொட்டப்படுவதாக கரவெட்டி சுகாதாரப் பகுதியினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலினை அடுத்து சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோஸ்குமார் மற்றும் நெல்லியடிப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டாரா தலைமையிலான குழுவினர் மேற்படி பகுதியில் உள்ள குப்பைகளை சோதனையிட்டனர்.


இதன்போது கடிதத் தலைப்புகள், மின்சார பட்டியல் போன்றன மீட்கப்பட்டன. அதனடிப்படையில் 37 பேர் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-60)

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பண்டாரக்குளம் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## மீதொட்டமுல்ல அனர்த்தம் குறித்து பிரான்ஸ் அதிர்ச்சி



பல உயிர்களை காவு கொண்ட மீதொட்டமுல்ல குப்பை மேடு பகுதியில் இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பில் பிரான்ஸ் அதிர்ச்சியடைந்துள்ளதாக அந்நாட்டு தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புத்தாண்டு தினத்தன்று மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து மக்கள் குடியிருப்புக்கள் மீது விழுந்தமையினால் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்தும் மீட்பு பணிகள் அந்த பகுதியில் தொடர்கின்றது. இந்த சம்பவமானது, பிரான்ஸ் அரசாங்கத்தையும் மக்களையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அனர்த்தத்தின் போது ஒற்றுமையுடன் அதிகாரிகள் உட்பட அனைத்து தரப்புகளும் செயற்பட்டமை சிறந்த எடுத்துக்காட்டு எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## புலனாய்வுப் பிரிவினரின் மனைவிமார் மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் மனைவிமார் மற்றும் பெற்றோர் இலங்கைமனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்றை செய்துள்ளனர்.

சாட்சியங்கள் இன்றி தமது கணவன்மாரும், பிள்ளைகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இதில் தாய்நாட்டுக்கான படையினர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்னவும் கலந்து கொண்டார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை, ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்கப்பட்ட சம்பவம், மாணவர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சத்திய சாயி ஆராதனா மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் சத்திய சாயி ஆராதனா மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை 8.45 மணிக்கு யாழ்ப்பாணம், சேர்.பொன் இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1050

Search for people, places and things Nagendram Home

### நாதன்




### தர்சா




### மிது




### தனுஜா




### தனுசா




### தவம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தீராத தலைவலியாய் திட்டமிடா திண்மக் கழிவகற்றல்

(தொடர்ச்சி)

நீயுமா புரூட்டஸ்? என்ற மாதிரி படித்தவர்களே பக்குவம் இன்றி பல இடங்களிலும் கழிவுகளை கண்டபடி வீசுவாராயின் பாமரனை நொந்து ஆகப் போவது என்ன?

பக்காவாய் திட்டம் தீட்டி படிப்படியாய் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் மனப்பாங்கு இருந்தாலே போதும் பிரச்சினைகள் சூரியனைக்கண்ட பனி போல பட்டென்று விலகி விடும்.


கிராமத்துத் தலைமைகள், கிராம சேவகர்கள் மற்றும் பல அமைப்புகளை ஒருங்கிணைத்து பிரதேசம் சார் விழிப்புணர்வுக்குழு அமைத்து வினைத்திறனாய் விளைவு காண விரைந்திட வேண்டும்.

இல்லையேல் 2050 களில் குப்பைகளின் நகரம் யாழ்ப்பாணமும் அது சார் பிரதேசங்களும் என்ற தலையங்கத்திற்கு சொந்தக்காரர் ஆகவேண்டி வரும்.

நகரங்கள், இடை நகரங்கள் என பிரதேசம் சார்ந்து பிரித்து வலயக் கழிவுகளை ஒருங்கிணை த்து இறுதியில் ஒன்றி ஸ்ணந்த கழிவு மீள் சுழற்சி நிலையத்திற்கு அனுப்பிவைத்தல் சாலப் பொருந்தும்.

பட்டிதொட்டி எல்லாம் கழிவகற்றல் விழிப்புணர்ச்சி தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். அவற்றை கண்காணிக்க அனுதினமும் அவா வேண்டும்....

கருத்து பேசியது போதும் என்னதான்டா சொல்லவருகிறாய் இப்போ என நீங்கள் கேட்பது புரிகிறது. அதற்குபடம் 1 இல் காட்டியவாறு சில வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தலாம் என்பது அடியேனின் தாழ்மையான கருத்து. இதைவிட சீரான, மேலான திட்டங்கள் காணப்படின் தயவு செய்து உடனடியாகவே நடைமுறைக்கு கொண்டு வாருங் கள்.




படம்: பிரதேசம் சார் மாதிரி செயற்பாட்டு அணி

**GN**: கிராம சேவையாளர் பிரிவு

**GS**: கிராம சேவையாளர்

**DS**: பிரதேச செயலர்

**DMO:**அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்

**MC/PS**: மாநகர சபை/ பிரதேசசபை உத்தியோகத்தர்

கிராமங்களின்/ ஒரு பிரதேசத்தின் அத்தனை நெளிவு சுளிவுகளும் தெரிந்த ஒரே நபர் நம் கிராம சேவையாளர்கள். அவர் தம் தலைமையின் மூவர் கொண்ட அதி வினைத் திறன் கொண்ட செயற்பாட்டு அணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதில் அந்தந்த பிரதேசப் பிரதிநிதிகளாய் இருவர் தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்விருவரும் அனைவரும் அறிந்த அனைத்து காரியங்களையும் வெளிப்படையாகவும் பொது நோக்கோடும் செய்யக் கூடிய மற்றும் செயற்பாடுகள், அதுசார்ந்த விடயங்களை அப் பிரதேசமே கையாளக் கூடிய வகையில் உட்புகுத்தக் கூடியவர்களாயிருந்தால் மிகச் சிறப்பு. அத்தோடு அவ்வணியில் அப்பிரதேசத்தின் பொது சுகாதார உத்தியோகத்தரும் (PHI) சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும்நம்மட GSமாரோட எப்பவும் 24*7 தொடர்பில் இருக்கக் கூடியவாறு பிரதேசசபை உத்தியோகத்தர் / மாநகரசபை உத்தியோகத்தர் இருந்து செயற்பட வேண்டும். இவற்றிற்கு மேலாக நம்மட பிரதேச செயலாளரும் அனர்த்த முகாமைத்துவ (DMO) உத்தியோகத்தரும் இவற்றின் செயற்பாடுகளை நித்தமும் கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறாக குறித்த கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்றாக வலயமாக்கி அவ்வலயங்களில் பொதுவான குப்பை சேகரிப்பு நிலையங்களினை உருவாக்குவதுடன். அச்சேகரிப்பு நிலையங்களில் இருந்து இறுதியாக மீள்சுழற்சிசெய்யப்பட வேண்டிய பெரிய நிலையத்திற்கு அக்குப்பைகள் அன்றாடம் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த சங்கிலித் தொடரில் செயற்பாடுகள் எங்கு உடைவு ஏற்படினும் குப்பைகள் ஆங்காங்கே பல்லிளித்து சவால் விடுவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே இச்சங்கிலித் தொடர் வேலையின் செயற்றிறன் அதில் தொடர்புபட்ட அனைவரினதும் தலையாய கடமையாகும்.

சுத்திகரிப்பு தொழிலாளர் தம் உரிமைகள்காக்கப்பட வேண்டும்...அவர்தம்பணிக் கொடுப்பனவுகள் சரியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு மட்டுமல்லாது அவர்களுக்கான திண்மக் கழிவகற்றல் தொட்ரிகளை செயற்றிறன்மிக்க தொழில் சார் தகைமைகள் கொண்ட பயிற்சிகள் முறையாக வழங்கப்பட்டு சீருடைகள் கட்டாயமாக்கப்பட்டு பணியமர்த்த வேண்டும்.

அவர்தம் குடும்பம்சார் உறுப்பினர்களுக்கு முறையான முறைசாராக் கல்வி முறை அறிமுகப்படுத்தி அறிவூட்டல் முறைப்படி நடக்க வேண்டும். நியமங்கள் வகுக்கப்பட்டு அதற்கிணங்க வேலை புரிவோரின் தரங்கள் அதிகரிக்கப்பட்டு சம்பள உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

நியமம் தவறுவாராயின் நீதியின் படி வேலை நீக்கம் / தற்காலிக பணியிடை நீக்கம் செய்வது எல்லோருக்கும் படிப்பினையாக இருக்க வேண்டும்.

மொத்தத்தில் சுத்திகரிப்பு தொழிலாளர் தம் உயர்வு. பிரதேசத்தின் மலர்வு என அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

கட்டணக்கழிப்பறைபோல கட்டணக் கழிவகற்றல் நடைமுறைப்படுத்த வேண்டும். சீராக நகர்ப்புறத்து குப்பைகளுக்கு குப்பை வரி விதிக்கப்பட்டு அவ்வரிகள் எல்லாம்மீள்சுழற்சி மீள்பாவனை ஆகியவற்றினை உட் கட்டமைப்பு விதிக்குரிய உபகரணங்கள். இயந்திரத் தொகுதிகள் வாங்கப்படவும் அவற்றின் தொடர்ச்சியான் இயக்கத்துக்கும் செலவிடப்படுவது நேர்த்தியாக கண்காணிக்கப்பட வேண்டும்.

திறந்த ட்ரக்டர்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவது முற்றாகத்தடை செய்து கனரக இயந்திரங்கள் பாவனக்கு கொண்டு வரப்பட வேண்டும். இவன் என்னடா நடைமுறைக்கு சாத்தியமில்லாததைக் கதைத்து நேரத்தை வீணடித்து கொண்டிருக்கிறான் என்று எண்ணுகிறீர்களா? இல்லவே இல்லை. செயற்றிறன் மிக்க பெறு பேற்றை அடைய வேண்டு மாயின் அவற்றிற்கு ஆன அடித்தளங்கள். நியமங்களுக்கு ஏற்றவாறு சரியாக இடப்பட வேண்டும் என்பதே என்னுடைய வாதம்.

இறுதியாக லக்ஒவ்கோடினேசன் (lack of coordination) என்னடா இது புதுசா இருக்கே. இது புதுசு இல்லை... பழசு மற்றும்..... வழமையானது தான்... பிரச்சினைகளுக்கு தீர்வு காண கூட்டப்படும் கூட்டங்கள் எல்லாவற் றிலும் ஒலிக்கின்ற ஒரே வசனம் "லக் ஒவ் கோடி னேசன்" (lack of coordi nation) ஆனால் பாருங்கள் அதில் அப்பிரச்சினை சார்ந்த அனைத்து தரப்பும் ஒரே மேசையில் அருகருகே புன்னகை பூத்தபடி அமர்ந்திருப்பர்.

அதிகாரம் உள்ள அதிகாரியில் இருந்து அதை நடைமுறைப் படுத்தும் உத்தியோகத்தர் வரை காணப்படுவார்... அப்படியாயின் அது எப்படி lack of coordination. உண்மையில் அது lack of integration, lack of communication, lack of accountability மற்றும் lack of responsibility இத்தனை "லக்கும்" ('Lack') உருப்பெருப்பிக்கப்பட்டு ('Lack' Magnification) . ஒருங்குவிக்கப்பட்டு ('Lack' Accumulation) வந்த விளைவுகளின் பூதாகர பெறுபேறே நம்மட "லக் ஒவ் கோடினேசன்" ( lack of coordination )

அதனால் அவர்தம் கடமையின் பொறுப்புக்கள் உணரப்பட்டு அவை சரியாகப் பகிரப்பட்டு சரியாக ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படின் சரியான பெறுபேறுகளின் அடைவு இமாலயத்தை தாண்டும் என்பது நிச்சயம்.

(முற்றும்)

கு. குணாளன்
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை
விஞ்ஞானபீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

இதுவரை நடைபெற்ற புதிர்ப் போட்டிகளிற்கான பணப் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளாதோர் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு (30-04-2017) முன்னதாக உங்கள் பணப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் பணப்பரிசில்களை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு**A**, ஆசிரியர். கலாநிதி. (செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம். சிரேஷ்ட விரிவுரையாளர் என்பவரிடம் இரசாயனவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 183 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்.
கந்தசுவாமி கோயிலடி.
வட்டுக்கோட்டை

**புதிர் 183க்கான கேள்வியும் விடையும்:**

இலங்கையின் மிகப்பெரிய தானியக் களஞ்சியம் அண்மையில் எங்கே திறந்து வைக்கப்பட்டது?

மொனராகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2017-14.05.2017

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்!



உழைப்பின் மூலமே அதிர்ஷ்டம் வரும் என்று சொல்லும் மிதுன இராசி அன்பர்களே!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் இராசிநாதன் புதன் வக்ரம் பெற்றும், நீச்சம் பெற்றும் சஞ்சரிக்கிறார். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசிநாதன் மீது பதிகிறது.

அதுமட்டுமல்லாமல் இராசிநாதன் புதனும், சப்தம ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குருவும் பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். பரிவர்த்தனை யோகம் என்பது யோகங்களிலேயே சிறந்த யோகமாகும். அதுமட்டுமல்லாமல் நீச்சபங்க இராஜயோகமும் புத-சுக்ர யோகமும் ஏற்படுகிறது. இதன் விளைவாக பல நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது. பணவரவு திருப்திகரமாக இருக்கும். பக்கத்தில் உள்ளவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். நாலா திசைகளிலும் இருந்து நல்ல தகவல் வந்து கொண்டேயிருக்கும்.

அதேநேரத்தில் வாழ்வை வளப்படுத்துவது வழிபாடுகள் தான் என்பதையும் மறக்க வேண்டாம். வக்ர இயக்கத்தில் கிரகங்கள் சஞ்சரிக்கும் பொழுது, அக்கறை செலுத்த வேண்டிய இடம் ஆலயம்தான். குரு, சனி, புதன், சுக்ரன் ஆகிய நான்கு கிரகங்களும் வக்ரம் பெற்று சஞ்சரித்தபடி, மாதம் தொடங்குகிறது. எனவே புதன்கிழமை தோறும் லட்சுமி சமேத விஷ்ணுவையும், வெள்ளிக்கிழமைதோறும் அம்பிகையையும் வியாழக்கிழமைதோறும் குருவையும் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரையும் சனிபகவானையும் தொடர்ந்து வழிபட்டு வாருங்கள். அவ்வாறு செய்தால் கைநழுவிச் செல்ல இருந்த வாய்ப்புகள் கூட கைகூடி வரும். நவக்கிரக கவசம் பாடி நவக்கிரகத்தையே வழிபடுவதும் நல்லது.

சகாய ஸ்தானாதிபதி சூரியன் உச்சம் பெற்று சஞ்சரிப்பதால், காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். அரசியல் பிரமுகர்களின் ஒத்துழைப்போடு அனைத்து பிரச்சினைகளையும் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் வரும் உன்னதமான மாற்றங்கள் மகிழ்ச்சியளிக்கும். 8இற்கு அதிபதி சனி 6 இல் வக்ரம் பெறும்பொழுது, செய்யும் காரியங்களில் ஜெயம் கிடைக்கும்.

சுக்ரனின் வக்ர நிவர்த்தி காலம்

19 ஆம் திகதி புதன்கிழமை உங்கள் இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் வக்ர நிவர்த்தியாகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். அவர்கள் மேற்படிப்பு படிப்பதற்காக வெளிநாடு செல்லவேண்டுமென்று விரும்பினால், அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு கூடி வரும். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு மகிழ்ச்சி தரும் விதத்தில் அது நடந்தேறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

புதனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிநாதனாகவும் சுகாதிபதியாகவும் விளங்கும் புதன், 24 ஆம் திகதி திங்கட்கிழமை வக்ர நிவர்த்தியாகிறார். முதலில் ஆரோக்கியத் தொல்லை அகலும். அடுத்தடுத்துப் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வாழ்க்கைத் தேவை பூர்த்தியாகும்.




மனை கட்டிக் குடியேறும் வாய்ப்பு வந்தாலும், சுயஜாதக அடிப்படையில் வீடுகட்டுவதா? அல்லது கட்டிய வீட்டை வாங்குவதா? என்பதை ஆராய்ந்து செயற்படுவது நல்லது.

மேஷ புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் புதன் மே 8 ஆம் திகதி லாப ஸ்தானத்திற்கு வரப் போகிறார். எனவே மாதக் கடைசியில் வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். ஏற்றமும் இறக்கமும் இல்லாமல் சமநிலையில் தொழில் நடக்கும். பங்குதாரர்கள் உங்கள் பணத் தேவையைப் பூர்த்தி செய்வர். மாமன் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு நீங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். வெளிநாடு செல்லும் பயணம் அனுகூலமாகும். இம்மாதம் வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயரை வழிபடுவதோடு, வயதுக்கேற்றபடி ஸ்ரீராமஜெயம் எழுதுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இராசிநாதன் புதனின் வக்ர இயக்கத்தால் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தும் சூழ்நிலை உருவாகும். வீடு, இடம் மாற்றங்கள் வந்தால் அதை ஏற்றுக்கொள்வது நல்லது. விரயங்கள் கூடும். தொலைபேசி வழி பேச்சால் சிக்கல்கள் வரலாம். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே, கணவனின் அன்புக்கு பாத்திரமாக முடியும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்கதாக இருக்கும். உங்கள் பெயரில் வாங்கிய இடத்தை நல்ல விலைக்கு விற்கும் சூழல் உருவாகும். மாதக் கடைசியில் புதனின் பெயர்ச்சிக்குப் பிறகு புதிய திருப்பங்கள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். சித்ரா பௌர்ணமி நாளில் சித்ரகுப்தன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

## தீட்டிய திட்டங்கள் உடனுக்குடன் நிறைவேறும்!



உடல் பலத்தைக் காட்டிலும் மனோபலம் அதிகம் பெற்ற கடக இராசி அன்பர்களே!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் இராசிநாதன் சந்திரனைத் தனாதிபதி சூரியன் பார்க்கும் விதத்தில் மாதம் தொடங்குகிறது. அதுமட்டுமல்லாமல் விரயாதிபதி புதன் வக்ரம் பெற்றிருக்கிறார். அவரை 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான், வக்ரம் பெற்றுப் பார்க்கிறார். எனவே இந்த மாதம் உங்களுக்கு இனிய மாதம் தான்.

எண்ணற்ற வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நிதிப் பற்றாக்குறை அகலும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சிகளில் கூட ஆர்வம் காட்டுவீர்கள். அதிக உழைப்பின் பேரில் லாபத்தைப் பெற்று வந்த நீங்கள், இப்பொழுது எளிய வழியில் ஆதாயம் காண்பீர்கள்.

சந்திரனை இராசிநாதனாகப் பெற்ற நீங்கள், சந்திரன் பூரணத்துவம் பெற்று பிரகாசிக்கும் சித்ரா பௌர்ணமி நாளில் மலை வலம் வருவது நல்லது. சித்ரகுப்தனையும் வழிபடுங்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்க முன் வருவீர்கள். 2இல் ராகுவும் 8இல் கேதுவும் உலா வருவதால், உங்களுக்கு சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. ராகு பொருள் வளத்தைக் கொடுப்பார். ஆனால் அதேநேரம் கேது பகவான் விரயங்களை வழங்கக் காரணமாக இருப்பார்.

அது மருத்துவச் செலவாகவும் இருக்கலாம். அல்லது மனை வாங்குதல் போன்ற சுப விரயங்களாகவும் இருக்கலாம். பால்ய நண்பர்களின் சந்திப்பால் தொழிலுக்குத் தேவையான மூலதனங்கள் கிடைக்கும். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்து இப்பொழுது பலமடங்கு லாபத்திற்கு விலை போகும். அந்தப் பணம் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு மூலதனமாகவும் இருக்கும்.

சுக்ரனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் மாதத் தொடக்கத்தில் உச்சம் பெற்றிருப்பதும், வக்ரமும் அடைந்திருக்கிறார். 19 ஆம் திகதி புதன்கிழமை வக்ர நிவர்த்தியாகிறார். இதன் விளைவாக உறவினர் பகை மாறும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஒருசிலர் ஏற்றுக் கொள்ள முன்வருவர். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். பிரபலமானவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவி செய்வர்.

புதனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 24ஆம் திகதி திங்கட்கிழமை மீனத்தில் வக்ர நிவர்த்தியாகிறார். அதேநேரத்தில் புதன் நீச்சம் பெற்று விளங்குகிறார். மறைவிடத்து ஸ்தானாதிபதிகள் நீச்சம் பெறுவது யோகம்தான். தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டேயிருக்கும். பணத்தை கையில் வைத்துக் கொண்டு காரியத்தைச் செய்ய இயலாது. காரியத்தைத் தொடங்கிவிட்டால் பணம் தானாகவே வந்து சேரும். பயணங்களால் பலன் கிடைக்கும். தூர தேசத்திலிருந்து உத்தியோகம் சம்பந்தமாக ஒருசிலருக்கு அழைப்புகள் வரலாம். வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.




மேஷ புதனின் சஞ்சாரம்

மே 8 ஆம் திகதி மேஷ இராசிக்குப் புதன் செல்கின்றார். சகாய ஸ்தானாதிபதியான புதன், தொழில் ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது தொழிலில் முன்னேற்றம் காணப்படும். கூட்டாளிகள் கூடுதல் லாபம் கிடைக்க வழிவகுத்துக் கொடுப்பர். தீட்டிய திட்டங்கள் உடனுக்குடன் நிறைவேறும். வங்கிகளில் கடன் கேட்டு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு, அது கிடைக்கலாம். அதேநேரத்தில் 5 இல் சனி இருப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

இம்மாதம் பௌர்ணமியன்று மலை வலம் வருவது நன்மையைத் தரும். வக்ரச் சனியால் பாதிப்புகள் ஏற்படாமலிருக்க பட்டாபிஷேக ராமர் கோவில் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் 2 இல் ராகு இருப்பதால் நிதிப்பற்றாக்குறை அகலும். பொருளாதார நிலை உயரும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். குரு பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், கல்யாணக் கனவு நனவாகும். தாய்வழி ஆதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் வழியில் ஒருசிலர் பகைமை பாராட்டினாலும், கடைசி நேரத்தில் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். உங்கள் சொல்லுக்கு வாழ்க்கைத் துணை மட்டுமல்லாமல், கூட இருப்பவர்களும் மதிப்புக் கொடுப்பர். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் விரயம் உண்டு. நாகசாந்திப் பரிகாரங்களை செய்தால் நல்ல காரியம் நடைபெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தத் தேர்தலை எதிர்கொள்ளவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார்

## மேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

எத்தகைய தேர்தல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளதாக் மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.

அரசாங்கம் இவ்வருடத்தில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்துவதும் உறுதி என குறிப்பிட்ட அவர், எவராலும் அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் 'சிராவஸ்தி'யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்தும் விளக்கமளித்த முதலமைச்சர் எவர் எத்தகைய கருத்துக்களை வெளியிட்டாலும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தை எவராலும் வீழ்த்த முடியாது. எதிர்வரும் செப்டெம்பரில் மூன்று மாகாண சபைகள் கலைக்கப்படவுள்ளன. அந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலும் இந்த வருடத்தில் நடத்தப்படும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திப் போட முடியாது என்பதால் அந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும். இதுவே அரசாங்கத்தின் தீர்மானமாகும். எனினும் சில வேளைகளில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் முந்தலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிராம மட்டத்திலிருந்து சகல மட்டங்களிலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. தொகுதி அமைப்பாளர்களுக்கு கட்சியினால் இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த இலக்கை வெற்றிகொள்ள அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

மே தினத்தைப் பொறுத்தவரை கண்டி மற்றும் கொழும்பைத் தவிர ஏனைய ஒவ்வொரு தொகுதி அமைப்பாளரும் 500 பேரை மே தினத்துக்கு அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

அதேபோன்று கூட்டு எதிர்க் கட்சியினர் எந்த நேரத்திலும் எம்மோடு இணைந்து செயற்படலாம். அதற்கான கதவுகள் திறந்துள்ளன. எந்தத் தேர்தலிலும் அவர்கள் எம்மோடு இணைய முடியும். இம்முறை மேதினத்தில் கூட அவர்கள் இணையலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்கும் சகலரையும் இணைத்துக் கொண்டு முன் செல்வதே கட்சியினதும் தலைமையினதும் நோக்கமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 182 வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் மூவர் கைது

குருந்துவத்த பகுதியில் கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய சட்டவிரோதமாக 182 வெளிநாட்டு மதுபான போத்தல்களை கொண்டு சென்ற மூவரை கடற்படையினர் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவினர் இணைந்து கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் உரிமம் பெறாமல் சட்டவிரோதமாக மோட்டார் வாகனமொன்றின் மூலம் குறித்த மதுபான போத்தல்களை கொண்டு செல்லும் போதே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# கொள்ளுப்பிட்டியில் பாக்.பிரஜை கைது

(கொழும்பு)

விசாக் காலம் நிறைவடைந்த நிலையில் நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டுக்காக பாகிஸ்தான் பிரஜையொருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பாகிஸ்தான் பிரஜை நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் 30 வயதான ஆண் என பொலிஸார் தெரிவித்ததுடன், அவரை புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# கொழும்பில் சேரும் குப்பைகளுக்கு நிரந்தரத்தீர்வை பெற்றுத்தருவோம்

## ஜப்பான் இலங்கைக்கு வாக்குறுதி



(கொழும்பு)

கொழும்பு நகரில் சேரும் குப்பைகளுக்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுத் தருவதாக ஜப்பான் உறுதிமொழி வழங்கியுள்ளது.

மீதொட்டமுல்லயில் இடம் பெற்ற அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜப்பான் விசேட அத்தியாவசிய ஒரு தொகை நிவாரணத்தை நேற்று முன்தினம் விமானத்தின் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிவாரணப் பொருட்கள் இடர்முகாமைத்துவ அமைச்சில் இடர்முகாமைத்துவ அமைச்சிடம் நேற்று முன்தினம் மாலை கையளிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள ஜப்பான் நாட்டுக்கான தூதுவர் கொனிச்சி சுகுனாமா, பொருட்களை இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவிடம் கையளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீதொட்டமுல்லயில் இடம் பெற்ற அனர்த்தம் தொடர்பாக விரைவாக ஆராய ஜப்பான் உதவிகளை வழங்கும் என்பதோடு கொழும்பில் சேரும் குப்பைகளுக்கு நிரந்தர தீர்வ பெற்றுகொடுக்க ஜப்பான் உதவும் எனவும் இலங்கையிலுள்ள ஜப்பான் நாட்டுக்கான தூதுவர் கொனிச்சி சுகுனாமா தெரிவித்தார்.

கூடாரங்கள், மெத்தைகள், நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், மலசல கூடங்கள் உட்பட பல நிவாரணப் பொருட்களை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவிடம் கொனிச்சி சுகுனாமா கையளித்தார். (இ-7)

# கடமையை செய்யத் தவறிய பொலிஸ் அதிகாரி நீக்கம்

மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறிய குற்றச்சாட்டின் கீழ் இவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் மிக முக்கிய சந்திகளில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், வவுணதீவு - கன்னங்குடா சந்தியில் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து இடம்பெற்ற பகுதியில் அன்றைய தினம் பொலிஸார் கடமைகளில் இருக்கவில்லை என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்தே வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்ய முடியாது-சுவாமி



வேலூர் மத்திய சிறையில் உள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கு குற்றவாளிகளை விடுதலை செய்ய மாட்டோம் என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.

வேலூர் மாவட்டம், ஆற்காட்டை அடுத்த கலவையில் உள்ள காஞ்சி சங்கர மடத்துக்கு பா.ஜ.க. மூத்த தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி கடந்த செவ்வாய்க்கிழமை வருகை தந்தார்.

பின்னர், அங்குள்ள காஞ்சி மடத்தின் பீடாதிபதிகளுடைய சமாதிகளை வணங்கினார். இதையடுத்து, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தமிழகத்தை சிறந்த மாநிலமாக மாற்ற பா.ஜ.க. முயற்சிமேற்கொண்டு வருகிறது.

டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் நடைபெறும் போராட்டங்களைப் பார்க்கும் வேலை பிரதமருக்கு கிடையாது. அவருக்கு பல்வேறு பணிகள் உள்ளன. தமிழக முதல்வர் விவ சாயிகளின் போராட்டத்தை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும்.

அதன் மூலம் பிரதமர் விவசாயிகளை தனது வீட்டிலோ, அலுவலகத்திலோ அழைத்து, அவர்களது குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்திருப்பார். விவசாயிகளின் போராட்டம் குறித்து தமிழக எம்.பி.க்கள் இதுவரை எதுவும் பேசவில்லை. டி.டி.வி. தினகரன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது நம்பும்படியாக இல்லை. வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடையவர்களை விடுதலை செய்ய முடியாது என்றார். (இ-3)

# 7 இலங்கை மீனவர்கள் விடுதலை

(சென்னை)

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 7 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இராமநாதபுரம் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 6 ஆம் திகதி "கவீச புதா-3" என்ற படகில் சென்ற இவர்கள் இந்திய எல்லைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேலும் குறித்த படகும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 | 100 | 50 | 60 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 100 | 110 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 110 | 120 | 120 | 140 | 100 |
| தக்காளி | 60 | 80 | 60 | 60 | 60 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 80 | 150 | 60 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 140 | 80 | 100 | 100 | 160 | 70 |
| பூசணி | 50 | 60 | 30 | 60 | 40 | 80 | 60 |
| புடோல் | 70 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 120 | 160 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 70 | 140 | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 80 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 30 | 100 | 50 | 60 | 100 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 40 | 80 | 140 | 160 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 90 | 120 | 140 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 250 | 300 | 200 | 120 | 300 |
| போஞ்சி | 140 | 300 | 120 | 160 | 140 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 30 | 80 | - | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 15 | 30 | 50 | 40 | 20 |
| தேசிக்காய் | 50 | 40 | 40 | 50 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 100 | 70 | 70 | 65 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 150 | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | - | - | - | - | - | - | - |
| முள்ளங்கி | 50 | - | - | 50 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 30 | - | 10 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 10 | - | 10 | 10 | 20 | 20 | 20 |
| [illegible] | - | - | - | - | - | 80 | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒருவன் தன் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய்தால் நலன் அதிகரிக்கும்; நாடு செழிக்கும்.
> ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரச உத்தியோகத்தை பூர்வ புண்ணியமாக கருதுங்கள்

கோழி மேய்க்கின்ற வேலையாக இருந்தாலும் கொர்ணமேந்து வேலையாக இருக்க வேண்டும் என்பது தமிழில் இருக்கக்கூடிய ஒரு பழமொழி.

இப்பழமொழியின் பொருள்; அரச உத்தியோகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

இன்றுவரை இப்பழமொழியின் தாக்கம் நம் மத்தியில் இருக்கவே செய்கிறது.

அரச உத்தியோகத்துக்கு இத்துணை உயர்வை தமிழ் மக்கள் கொடுக்கக்காரணம் என்ன என்ற கேள்வி எழும் போதெல்லாம்,

அரச உத்தியோகத்தில் ஒரு நிரந்தரத் தன்மை, நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கிடைக்கக்கூடிய சம்பளம், சமூக அந்தஸ்து, ஓய்வுக்குப் பின்பு கிடைக்கக்கூடிய பென்சன், பென்சன் எடுப்பவர் உயிரிழந்தாலும் அவரின் பென்சன் அவரது குடும்பத்துக்கு கிடைக்கக்கூடியதான ஏற்பாடுகள் என்பன காரணமாக அரச உத்தியோகத்துக்கு நம் மக்கள் முதன்மை கொடுத்தனர் எனலாம்.

மற்றும் இவை தவிர விடுமுறைகள், இதர சலுகைகள், கடுமையான மேற்பார்வையின்மை போன்றவையும் அரச உத்தியோகத்தின்பால் மக்களைத் திசை திருப்பியதெனலாம்.

எதுவாயினும் அரச உத்தியோகம் கிடைப்பதென்பது நாம் செய்த பூர்வ புண்ணியம் என்று நினைக்க வேண்டும்.

இந்த மனித வாழ்வில் இறைவன் நமக்குத் தந்த இந்தக் கொடைக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பது எங்களொருவரினதும் கடமையாகும்.

அவ்வாறு நன்றியுடையவர்களாக இருப்பதென்பது நமது கடமையை, நேர்மையாக, ஒழுங்காக, கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கக்கூடியதாகச் செய்வதாக்வே இருக்கும்.

எனினும் அரச உத்தியோகம் புரிபவர்களில் ஒரு பகுதியினர் தங்கள் கடமைகளை, பொறுப்புக்களை மறந்து சும்மா இருப்பதில் சுகம் காண்கின்றனர்.

இவர்களால் ஏழை மக்கள் அலுவலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர். நேரம், பணம் என்பவற்றை விரயமாக்கி மக்களை அலைய வைப்பதென்பது மிகப்பெரும் கொடுமையானது.

நான் நினைத்தால்தான் நடக்கும் என்ற கர்வம் அழிவைத் தரும். ஓர் அரச உத்தியோகத்தர் தனது கடமையைச் செய்துவிட்டு ஓய்வாக இருப்பதில் நியாயம் இருக்கலாம்.

ஆனால் செய்ய வேண்டிய வேலையைச் செய்யாமல் கதையளப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. அது கடவுளைக் கோபம் கொள்ள வைக்கும்.

அரச உத்தியோகத்தர் சிலரின் அசமந்தப் போக்கு, எதையும் எதிர்க்கும் மனோநிலை, சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனை மருந்துக்கும் இல்லாத தன்மை போன்றவை காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய நிலைமைகளை சுட்டிக்காட்டும் வகையில், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அவர்கள்; அரச அதிகாரிகள், பணியாளர்கள் பொதுமக்களுக்கு சேவை செய்ய விருப்பமற்றவர்களாக இருக்கின்றனர் எனத் தனது மனக்கவலையைப் பதிவு செய்துள்ளார்.

தான் அறிந்த வகையிலும் பொதுமக்கள் அவருக்குக் கொடுத்த தகவல்களின்படியும் அவர் மேற்போந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரச பணியில் அசமந்தம் காட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டிருக்கக்கூடிய யாழ்.அரச அதிபர்,

அரச அதிகாரிகளும் பணியாளர்களும் மக்களுக்குச் சேவையாற்ற முன்வர வேண்டும் எனப் பெருந்தன்மையாகக் கேட்டிருப்பது குறித்து அனைவரும் கவனம் செலுத்தி, பணிபுரியும் காலத்தில் அது நமக்கு இறைவன் தந்த கொடை என்று நினைத்து இன்முகத்தோடு மக்கள் பணி செய்ய வேண்டும்.

இதைச் செய்யும் போது இறைவன் நிச்சயம் வெகுமதி தருவான்.

## அமெரிக்காவுக்குள் அத்துமீறி நுழைந்த ரஷ்ய போர் விமானங்களால் பரபரப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க வான் பகுதிக்குள் அத்துமீறி பறந்த ரஷ்ய போர் விமானங்களை, அமெரிக்க போர் விமானங்கள் இடைமறித்து திருப்பி அனுபபிய சம்பவம் திடீர் பரபரப்பை ஏற்படுத்தியது. வட அமெரிக்க கண்டத்தில் கனடாவின் மேற்கு பகுதியில் அலாஸ்கா என்ற இடம் உள்ளது.

இது, அமெரிக்காவுக்கு சொந்தமான பகுதி ஆகும். இதையொட்டி கோடியாக் என்ற தீவு இருக்கிறது. இதுவும் அமெரிக்காவுக்கு சொந்தமானது.

இதையொட்டிதான் ரஷ்யாவின் கிழக்கு பகுதி நிலப்பரப்பு அமைந்துள்ளது. ரஷ்யப் போர் விமானங்கள் அந்தப் பகுதியில் அடிக்கடி ரோந்தில் ஈடுபடுவது வழக்கம்.

இவ்வாறு ரோந்து வந்த 2 போர் விமானங்கள் கோடியாக் தீவு பகுதியில் அத்துமீறி நுழைந்து சுற்றி வந்தது.

இவை B.A.-95 என்ற வகையை சேர்ந்த குண்டு வீச்சு விமானங்கள் ஆகும்.

ரஷ்ய விமானங்கள் அத்துமீறி நுழைந்தது தெரிய வந்ததும் அமெரிக்கா 2 போர் விமானங்களை அந்த திசை நோக்கி அனுப்பியது. எப்.-22 ராப்டார் வகையை சேர்ந்த இந்த விமானங்கள் ரஷ்ய போர் விமானங்களை இடைமறித்தது.

இதனால் ரஷ்ய விமானங்கள் பின்வாங்கியதுடன் தங்கள் வான்பகுதிக்கு சென்று விட்டன.

இத்தகவலை அமெரிக்க அதிகாரிகள், தெரிவித்தனர். ஆனால், இந்த சம்பவம் குறித்து பென்டகனோ, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகமோ எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## குருபூசை

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலயத்தினரால் நடத்தப்படும் திருநாவுக்கரசரது குருபூசை நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும். அதே வேளை நண்பகல் அன்னதானம் வழங்கப்படும். (இ-3)

⅄⅄⅄⅄⅄⅄⅄⅄

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நாளை 22 ஆம் திகதிசனிக்கிழமைமாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் இடம் பெறும். (இ-3)

## சரீன் வாயு பயன்படுத்தி தாக்குதல்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் நடத்தப்பட்ட விஷவாயு தாக்குதலில் பெறபட்ட மாதிரிகளை சோதனை செய்ததில் சரீன் வாயு பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

சிரியாவில் கடந்த ஏப்ரல் 4இல் நடத்தப்பட்ட விஷவாயு தாக்குதலில் சரீன் வாயு பயன்படுத்தப்பட்டுள்ளதாக வேதியியல் சோதனை மூலம் கண்டறியப் பட்டுள்ளது. சிரியாவில் அரசுக்கு எதிராக செயற்படும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் தீவிரவாதிகளை குறிவைத்து அரசுக்கு ஆதரவான விமானப்படையின் போர் விமானங்கள் கடந்த 4ஆம் திகதி இரசாயன ஆயுதங் களை வீசி தாக்குதல் நடத் தியது.

இட்லிப் மாகாணத்தின் மத்திய பகுதியில் உள்ள கான் ஷெய்க்குன் நகரில் போராளிகள் வாழும் பகுதியில் நடத்தப்பட்ட இந்த விஷவாயு தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 100 பேர் உயிரிழந்தனர்.

இந்த விஷவாயு தாக்குதலுக்கு ரஷ்யா மற்றும் சிரிய இராணுவம் தான் காரணம் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குளோரின் விஷவாயுவை பீப்பாயில் அடைத்து சிரியா இராணுவம் ஹெலிகொப்டர் மூலம் வீசியதாக இந்த தாக்குதல் தொடர்பாக ஐ.நா. சபை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் சரீன் வாயு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வக சோதனையில் தெரிய வந்துள்ளது. (இ-3)

## பெண்களை ஏமாற்றியவருக்கு வெளிநாட்டுக்கு செல்லத்தடை

திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, பல பெண்களை ஏமாற்றி, மாலை தீவுக்கு அழைத்துச்சென்று, அங்கு விபசாரத்தில் ஈடுபடுத்திய வர்த்தகர் ஒருவருக்கு, வெளிநாடு செல்லத் தடை விதித்து, கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் லால் ரணசிங்க பண்டார உத்தரவிட்டார். பத்தரமுல்லையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கே, இவ்வாறு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர், காலி மற்றும் மஹரகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களை ஏமாற்றி, வெளிநாடுகளில் விபசாரத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில், அங்கிருந்து இலங்கைக்குத் தப்பி வந்த பெண்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அறிவித்ததையடுத்து, பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர், கடந்த டிசெம்பர் மாதம், இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டையடுத்து, குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை, கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்திய போதே, வெளிநாடு செல்வதற்கான தடையை நீதவான் விதித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மாரக்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிககிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில புகையிரத நிலைய வீதி, இறம்பைக்குளம், சூசைப் பிள்ளையார் குளம், பூங்கா வீதி, கண்டி வீதி (ஏ9 வீதி), 1ம் மற்றும் 2ஆம் குறுக்குத் தெரு, மதவுவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப் பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து (ஏ9 வீதி) ஊடாக நெளுக்குளம் ஊடாக நேரியகுளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பம்பைமடுவரை, ஓமேகா லைன், UNHCR குருமன்காடு, கந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், தங்கன் குளம், இலுப்பைகுளம், அழகாபுரி, துட்டுவாகை, செட்டிகுளம் நகரம், சின்னசிப்பிகுளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், அரசடி குளம், காந்திநகர், அரசன்குளம், வலயம6, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம், செட்டிகுளம் வைத்தியசாலை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, பம்பை மடு பல்கலைக்கழகம், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, சிஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெயவேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, பூ-ஓயா படை முகாம், ஈரப் பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, கார்கில்ஸ் பூட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, Kowloom ஆடைத் தொழிற்சாலை, குளோப் அரிசி ஆலை, 2Vir படை முகாம், லங்கா அரிசி ஆலை, SVR அரிசி ஆலை, ஓவியா விடுதி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா பொது வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில வட்டக்கண்டல் குருவில் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தெய்வத்தை வணங்குங்கள் நினைத்தது நடக்கும்

வாரத்தில் உள்ள ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கடவுளுக்கு உரியதாக கருதப்படுகிறது. எனவே ஒவ்வொரு நாளும் அந்த நாட்களுக்குரிய கடவுகளை தரிசித்து வழிபடுவது சிறந்தது.

திங்கட்கிழமை சிவனுக்கு உகந்த நாள். எனவே திங்கட்கிழமை நீலகண்டனுக்கு விரதமிருந்து, சிவபெருமானுக்கு பால், அரிசி மற்றும் சர்க்கரை படைக்க வேண்டும்.

செவ்வாய்க்கிழமை அனுமன் மற்றும் துர்க்கை அம்மனுக்கும் மிகவும் உகந்த நாளாகும். எனவே செவ்வாய்க்கிழமைகளில் விரதமிருந்து ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கு போட்டு வந்தால், வாழ்க்கை வளம் பெறும்.

புதன்கிழமை விநாயகப் பெருமானுக்கு உகந்தது. எனவே புதன்கிழமை அன்று விநாயகர் கடவுளுக்கு விரதமிருந்து வழிபட்டு வந்தால், எந்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். (தொடரும்)




### காலம் யார் கையில்?

❖ அறிஞர்களை வெற்றிகொள்ள, அறிவீனர்களுடன் வாதம் புரிய, தன்னைச் சுற்றி கூட்டம் சேர்க்க.. இந் நோக்கங்களுக்காக கல்வி கற்பவர்கள் சுவனத்தில் (சொர்க்கத்தில்) அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

❖ இறைவனே உங்களுக்காக நட்சத்திரங்களைப் படைத்தான். அவற்றின் மூலம் தரை மற்றும் கடலின் இருள்களில் நீங்கள் வழி தெரிந்து கொள்வதற்காக!

❖ இறைவன் கூறுகிறான்: காலத்தை திட்டாதீர்கள். காலத்தைத் திட்டுபவன் என்னை துன்பத்திற்கு உள்ளாக்குகின்றான். (ஏனெனில்) காலம் என் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. நானே இரவை பகலாக ஆக்குகின்றேன்.

❖ காலத்தைக் கணிப்பதற்கும், வெளிச்சத்தைத் தருவதற்கும் தான் சூரியனும், சந்திரனும் படைக்கப்பட்டனவே தவிர, அவற்றின் சுழற்சியைக் கொண்டு நன்மை தீமையைக் கணிப்பதற்கு அல்ல.

❖ பறவைகளைப் பறக்கவிட்டு அதனால் சகுனம் பார்ப்பது, கல்லெறிந்து குறிகேட்பது ஆகியவை இறைவனன்றி மற்றவற்றை வணங்குவதற்கு இணையான செயலாகும்.

**- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியான் வி.கழக உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர்

## சத்திவேல், பாரதி B வெற்றி





வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியான் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாள் போட்டிகள் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.40 இற்கு ஆரம்பமானது.

முதல் போட்டியாக கொக் கிழாய் சக்திவேல் வி.க எதிர்த்து மருதங்கேணி கணேசானந்தா வி.க விளையாடியது. விளையாட் டில் கோல்கள் எவையும் இரு அணிகளாலும் பெறப்படாது போட்டி சமநிலையில் முடிவுற்றது.

வெற்றியை தீர்மானிப்பதற்காக இரு அணிகளிற்கும் தண்ட உதைகள் வழுங்கப்பட்டது. இதன் மூலம் சக்தி வேல்அணி 4 கோல் களையும் கணே சானந்தாஅணி 3 கோல் களையும் பெற்றுக் கொண்டனர்.

அதனடிப்படையில் சக்திவேல் அணி வெற்றியைத்தனதாக்கிக் கொண்டது. இரண்டாவது போட்டியாக உடுத்துறை பாரதி B அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி றம்போ வி.க விளையாடியது. இடைவேளைக்கு முன்னர் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டு சமநிலையில் காணப்பட்டனர்.

இடை வேளையின் பின்னர் பாரதி B அணியினர் மீண்டும் ஒரு கோலைப் போட்டு இரண்டுக்கு ஒன்று என்ற கோல்க்கணக்கில் உடுத்துறை பாரதி B அணியினர் வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.




நான்கு அணிகளிலும் இருந்து பாரதி B மற்றும் கொக்கிழாய் சக்திவேல் விளையாட்டுக்கழக வீரர்களான ஜெசிந்தன், விஜயன் ஆகியோர் ஆட்ட நாயகர்களாக தெரிவு செய் யப்பட்டனர். (க-64)

# சென்.செபஸ்ரியான் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஏழு நபர் கொண்ட உதைபந்தாட்டப்போட்டி

## பிலிப் நேரியார்,செந்தமிழ் வெற்றி





வடமராட்ச்சிக் கிழக்கு லீக் அனுமதியுடன் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியான் விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்படும் அணிக்கு 7 பேர் கொன்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. இவ் விளையாட்டு நிகழ்வுகள் அனைத்தும் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்றவுள்ளது.

நடைபெற்ற முதலாவது போட்டியாக வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செம்பியன்பற்று சென்.பிலிப்பி நேரியார் விளையாட்டுக் கழகத்தினர் விளையாடினார்கள்.40 நிமிடங்கள் கொண்ட விளையாட்டில் இடைவேளைக்கு முன்னும்பின்னும் இரண்டு கழகங்களும் எந்த விதமான கோல்களையும் போடாது சமநிலையில் போட்டி நிறைவடைந்தது.

பின்னர் போட்டியின் விதி முறைப்படி ஒவ்வொரு கழகத்திற்கும் தலா ஐந்து தண்ட உதைகள் வழங்கப் பட்டன.அதன் அடிப்படையில் தண்ட உதைகள் மூலம் சென் .பிலிப் நேரியார் விளையாட்டுக் கழகத்தினர் மூன்று கோல்களைப் போட்டனர்.

உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினர் தண்டஉதை மூலம் எந்த விதமான கோல்களையும் போடாது பூச்சிய நிலையில் காணப்பட்டனர். இதன்மூலம் சென்.பிலிப் நேரியார் விளையாட்டுக் கழகத்தினர் மூன்று கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றியைத்தனதாக்கிக் கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியாக உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக A அணியை எதிர்த்து கேவில் வெள்ளிநிலா விளையாட்டுக் கழகத்தினர் விளையாடினார்கள், இந்தப் போட்டியில் இடைவேளைக்கு முன்னர் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்

இதனால் போட்டி விறுவிறுப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து இடைவேளையின் பின்னர் செந்தமிழ் விளையாட்டுக் கழக A அணியினரால் மேலும் நான்கு கோல்கள் வெள்ளிநிலா விளையாட்டுக் கழகத்திற்கு போடப்பட்டது.

அதன் அடிப்படையில் ஐந்துக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றியினை தமதாக்கிக் கொண்டனர்.

இப் போட்டியில் செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு வீரர்களான அகி-3 கோல்களையும் மயூரன். யூட் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர்.

வெள்ளிநிலா விளையாட்டுக் கழக வீரன் உலகானந்தன் ஒரு கோலைப் போட்டார். இவ் நான்கு அணிகளிலும் இருந்து ஆட்ட நாயகனாக உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக வீரன் அகி தெரிவு செய்யப்பட்டார். (க-64)

# சமநிலை தவிர்ப்பு உதையில் கலைமதி அரையிறுதிக்கு தெரிவு



பருத்தித்துறை உதைபந்தாட்டதின் லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது.

கழகத்திற்கு 7 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித் தொடர் "அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்" ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி என பெயரிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு 7.40 மணிக்கு நடைபெற்ற போட்டியில் பொறபதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமதி மோதியது.

இரு அணிகளும் இளம் வீரர்களைக் கொண்ட அணிகளாக காணப்பட்டதால் இரு அணிகளும் சம பலத்துடன் மோதியன. இரண்டு பக்கங்களும் கோல்கம்பங்களை நெருங்கிய பந்துகள் கோல்காப்பாளர் கைகளிலே பந்துகள் சென்றடைந்தன. போட்டி தொடங்கி 10நிமிடத்தில் கலைமதி அணியின் 10 ஆம் இலக்க முன்கள வீரர் தனது அணிக்கான கோல் ஒன்றை பெற்றுக் கொடுக்க கலைமதி முன்னிலை வகித்தது. அதனை தொடர்ந்து விறுவிறுபடைந்த போட்டியில் சென்பீற்றர் அணிக்கு நிறைய வாய்ப்புகள் இருந்தும் முதல் பாதி 1:0 என கலைமதி முன்னணி வகிக்க ஆட்டம் முடிவடைந்தது.


இரவு 8.10 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டம் ரசிகர்களின் உற்சாகம் வானத்தை பிளக்க போட்டி விறுவிறுப்பாகவும் இரு அணிகளும் மோதல் போக்கை கைகொண்டு விளையாடினர. போட்டியின் இறுதி நிமிடங்களில் சென்பீற்றர் அணியின் 4ம் இலக்க வீரர் கோல் ஒன்றை பெற்றுக் கொடுக்க ஆட்டம் சமநிலை ஆனாது. இறுதியில் போட்டி சமநிலையில் முடிவு பெற்றது. சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தீர்மானிக் கப்பட்டது.இதில் கலைமதி 4:3 என வெற்றி பெற்று அரை இறுதிக்கு சுற்றுக்கு சென்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவுசெய்யப்பட் கலைமதி வி.கழக அணியின் கோல்காப்பாளர் வீரர் சந்துரு அவருக்கான பரிசினை பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் செயலாளரும், உதைபந்தாட்ட நடுவரும் அ.அருளாந்த சோதி அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். (க)

# சதுரங்கப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினால் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட இருந்த இளையோருக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் கொழும்பில் நடைபெறும் சர்வதேச தரப்படுத்தல் சதுரங்கப் போட்டியை முன்னிட்டு பிற்போடப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை சதுரங்க சம்மேளன யாழ்ப்பாணப் பிரதிநிதி த.அருணகிரிநாதன் தெரிவித்துள்ளார். (க)

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம் - 2017 2 ஆவது சுற்றில் ஸ்கந்தா ஸ்ரார் அணி



கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழ கம் 24ஆவது வருடமாக நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி தொடரின் 8ஆவது போட்டி[illegible] வார இறுதியில் நடைபெற்ற[illegible] ஸ்கந்தா ஸ்ரார் அணி ஓல்ட்கோல்ஸ் அணியை 20 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தா டிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங்களை பெற்றனர்.

மிதூசன் - 28, றொபேட்சன் - 36, ஜெயபிரதாப் - 18, சயந்தன் - 27, அஜின்தன் - 14, துவாரகன் - 10 ஓட்டங்களையும் பெற்றனர். [illegible] ஓல்ட் கோல்ஸ் அணியை சார்ந்து நிரோஸ் - 4, விமலேந்திரன் - 1, சிறிகுகன் - 4 இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 23.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 150 ஓட்டங்களையும் பெற்றனர்.

மதூஸன்-69, பிரியதர் ஸன் - 18, நிமலேந்திரன் - 11, டிலக்ஸன் - 11, நிலக்ஸன் ஆட்ட மிழக்காது 11 ஓட்டங் களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் புருசோத்மன் - 2 கதியோன் - 2 சிந்து - 2, துவாரகன் - 3 இலக் குகளையும் கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 8ஆவது வருடமாக நடத்தும் தரவரிசை பட்டிய லுக்கு ஸ்கந்தா ஸ்ரார் அணி 5.90 புள்ளிகளையும், ஓல்ட் கோல்ஸ் அணி 2.40 புள்ளிகளையும் பெற் றுக் கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேப்பாப்பிலவு...

காணி உரிமையாளர்கள் நேற்று 51 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டு போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கேப்பாப்பிலவில் இடம்பெற்று வரும் நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்பிரகாரம் 111 ஏக்கர் காணிகளை மாத்திரமே தற்போது விடுவிப்பதற்கு பாதுகாப்பு தரப்பினர் இணங்கியுள்ள போதிலும், காணி விடுவிப்புக்கான கால எல்லை குறித்த உறுதிமொழி வழங்கப்படாமை தொடர்பாகவும் பகுதியளவான காணி விடுப்பு தமக்கு தேவையில்லை எனவும் தெரிவித்த மக்கள் தமது வாழ்வாதாரங்களை இராணுவத்தினர் பயன்படுத்துவதை நேரில் கண்டு மிகவும் கவலையடைந்தாகவும் தமது காணிகளிலிருந்து ஆயிரக்கணக்கில் தேங்காய்களை பறித்து வைத்திருப்பதாகவும் தமது காணிகளில் இராணுவத்தினர் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதாகவும் தாம் வீதியில் கிடந்தது அலைக்கழிவதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது மக்களுடன் உரையாடிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்கள் மன உறுதியோடு போராடுமாறும் போராட்டத்தின் மூலமே தீர்வு காணமுடியும் எனவும் தெரிவித்தார். மேலும் ஜனாதிபதி எதிர்வரும் மே மாதம் 17 திகதி அவரை தான் சந்திப்பதற்கு நேரம் தந்துள்ளதாகவும் இந்த சந்திப்பில் காணி மற்றும் வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோர் தொடர்பான விடயங்கள் தொடர்பில் தன்னால் எடுத்துரைக்கப்பட முடியும் எனவும முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-281)

## சிறைக்கைதி...

ரிழந்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் இருந்த 45 வயதுடைய யு.நிசாந்த் என்ற கைதியே நோய வாய்ப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் வவுனியா போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

எனினும் குறித்த கைதி சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ரி.ஐ.டியினர்...

ட்ட போட்டி குறித்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த விசாரணை கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைபெற்றுள்ளது. அக்கினிச் சிறகுகள் அமைப்பினால் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கில் உதைபந்தாட்ட போட்டி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த போட்டியில் வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்களை சேர்ந்த அணிகள் பங்குபற்றி வருகின்றன. இந்த நிலையில் நேற்றைய தினம் அக்கினி சிறகுகள் அமைப்பின் தலைவர் செல்வநாயகம் ஆனந்தவர்மன் என்பவர் வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்த விசாரணையில் குறித்த உதைபந்தாட்ட போட்டி நடத்துவதற்கு யாரால் பணம் வழங்கப்பட்டது?

புலம்பெயர் தமிழர்கள் பின்னணியில் உள்ளார்களா? என்பது தொடர்பிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அன்று குறித்த விளையாட்டுக்கழகம் நினைவுச்சுடர் ஏற்றுவார்களா? என்பவை தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக ஆனந்தவர்மன் தெரிவித்துள்ளார். இதேபோன்று கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் பொருளாளர் வவுனியா யோசப் முகாமில் உள்ள இராணுவத்தினரால் தொலைபேசி மூலம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் எமக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் தரப்படவில்லை. அன்பளிப்புக்கள் மூலமே பணத்தை திரட்டி இந்த போட்டியை ஒழுங்கு செய்துள்ளோம் என அவர்களுக்கு தெளிவுபடுத்தியதனை அடுத்தே போட்டியை தொடர்ந்து நடத்துவதற்கு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் ஆனந்தவர்மன் தெரிவித்துள்ளார். (செ-4)

## ரயில் மோதி...

குளம் வீதியைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் ஒருவர் புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக் குள்ளானதில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை மதியம் 12:10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று காலை 09.35, மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்த யாழ்தேவி புகையிர்தத்துடன் வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் உள்ள புகையிரதக் கடவையின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பண்டாரிக்குளம் வீதியைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் மோதுண்டு விபத்துக்குள்ளாக நேரிட்டது.

குறித்த மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்திருந்த நிலையில் பிரஸ்தாப குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகியுள்ளதுடன் சடலமும் புகையிரதத்தால் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தவர் விபத்து ஏற்பட இருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்தமையால் உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவத்தில் வவுனியா நகரசபை விடுதியில் வசிக்கும் நவலிங்கம்-ஜீவராஜ் (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா பொலிஸார் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக வவுனியா மாவட்ட வைத்திசாலையில் ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15,250)

## சுயநலத்துடன்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் அமைக்கப் பெற்ற மாவீரன் குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னிய னின் உருவச்சிலை திறப்பு விழா நேற்றையதினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தி னராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழர்களின் வீரம் செறிந்த வாழ்வியல் முறைமைகளை உலகுக்கு பறைசாற்றி நிற்கும் வன்னி மண்ணின் இறுதித் தமிழ் மன்னனாக விளங்கிய மாவீரன் பண்டார வன்னியனின் வரலாறு பற்றி எமது இளம் சிறார்களும் ஏனையோர்களும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

1882-ம் ஆண்டில் ஒல்லாந்தர்கள் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் வன்னி அரசை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு பல தந்திரங்களை கையாள வேண்டியிருந்தது.

வன்னி இராச்சியத்தை கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் பண்டாரவன்னியனால் ஏற்றுக் கொள்ளப்படாத போதும் அவனின் அருமைத் தம்பியர்களான கைலாய வன்னியனதும், பெரியமெயினாரினதும் வற்புறுத்தலின் பெயரில் ஆங்கிலேயர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணக் கோட்டைக்கு சென்றிருந்தான்.

அங்கே பண்டாரவன்னியனுக்கு பிரமாதமான வரவேற்புக்கள் வழங்கப்பட்டதுடன் எப்படியாவது பண்டாரவன்னியனை தமது ஆட்சிக்குள் அடக்கிவிட வேண்டும் என்ற முனைப்பில் ஆங்கிலேய தளபதிகள் முயன்றனர். இவ்வாறான பொறிமுறைகள் இப்போது எம் அரசாங்கங்களாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. "வா" என்று அழைப்பார்கள். போனால் குடிக்கத் தருவார்கள், சாப்பிடத் தருவார்கள். ஆனால் உரித்துக்களைத் தர மாட்டார்கள்!

எனினும் அஞ்சா நெஞ்சன் மாவீரன் பண்டாரவன்னியன் அவர்களின் கோரிக்கைகளை தூக்கி எறிந்து போருக்கு தயாரானான். பண்டாரவன்னியனுடன் நேருக்கு நேர் போர் புரிந்து அவனை வெல்ல முடியாது என்பதை நன்கு அறிந்த ஆங்கிலேயப் படைகள் வன்னி இராச்சியத்தின் சிற்றரசனாக விளங்கிய காக்கைவன்னியனின் உதவியுடன் பண்டாரவன்னியன் போர்ப் பாசறையில் தனித்திருந்த போது அவனை தந்திரமாக ஒட்டிசுட்டான் வரை கூட்டிச்சென்று விசாரணை என்ற போர்வையில் சுட்டுக் கொன்றார்கள் என்று கூறப்படுகின்றது.

வன்னியைச் சேர்ந்த எமது சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம், காக்கைவன்னியன் ஒரு கற்பனைப் பாத்திரமே என்று எங்கோ கூறியிருந்தார். ஆனால் காக்கை வன்னியன் போன்ற கதாபாத்திரங்கள் இன்றும் எம்மிடையே வாழ்கின்றார்கள் என்பதை அவர் ஒப்புக் கொள்வார் என்று நம்புகின்றேன்.

தோல்விகள் நிரந்தரமானது அல்ல. அதே போன்று வெற்றி வாகை சூடியவர்களும் தொடர்ந்து வெற்றியாளர்களாக மிளிர முடியாது என்பதற்கு பண்டாரவன்னியனின் வரலாறு ஒரு சிறந்த சான்றாகும். வன்னி இறுதி யுத்தத்தின் போது மறைந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் உணர்வுகளை ஒன்று திரட்டி இன்று பண்டாரவன்னியனின் உருவத்தில் இங்கு சிலையாக வடித்திருக்கின்றோம். தமிழர்களின் வீரம் செறிந்த வரலாறுகளையும் அவர்களின் யார்க்கும் அஞ்சா மனோதிடத்தையும் இந்த சிலை என்றென்றும் உலகு க்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். அதை வடித்த தம்பி பாலமுருகனுக்கு எமது பாராட் டுக்கள் உரித்தாகுக!

இந்தத் தருணத்தில் எமது வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையுடன் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் முன்வர வேண்டும். காக்கைவன்னியன் போல் சுயநல சிந்தனையுடன் சதி வேலைகளில் எம்முட் சிலர் ஈடுபடுவது முழுத் தமிழர் சமுதாயத்தையும் அழித்து விடும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்றிணைந்து எமது உரிமைகளுக்காகப் போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-281,9)

## 3 மாதத்திற்குள்...

ற்கு விசேட வேலைத்திட்டமொன்றை முனெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையான காலப்பகுதிக்குள் 60 வீதமான இடம்பெயர்ந்த மக்கள், தமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்த்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஊடகப் பிரதானிகள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இடையில் நேற்றைய தினம் இடம்பெற்ற சந்திப்பிலே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் காணாமல்போனோர் மற்றும் நிலமீட்புப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அங்கு இடம்பெயர்ந்திருந்தவர்களில் 60 வீதமானனோர் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 3 மாத காலப்பகுதிக்குள் எஞ்சியுள்ள மக்களும் மீள்குடியேற்றப்படுவார்.

மேலும் காணாமல் போனோர் தொடர்பில் இதுவரை காலத்தில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து வழங்கக்கூடிய தீர்வுகளை விரைவாகப பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (செ-11)

## ஆதி கால மனிதனின்...

ஆதிமனிதன் மற்றும் மிருகங்களின் பற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த எச்சங்கள் நேற்றுமுன்தினம் அலுகல்லென குகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என களனிப் பல்கலைக்கழக பேராசிரியரும் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ராஜ் சோமதேவ தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பற்கள் 4 முதல் 12 வயது வரையிலான குழந்தைகளினுடையது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் அதே இடத்தில் மட்பாண்டங்களின் எச்சங்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## வாயை திறந்தால்...

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று நாற்பத்து நான்காவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று மக்களை சந்தித்த வடமாகான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தகாலத்தில் கடத்தப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள், இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல்போகச் செய்யப்பட்டவர்கள் என தமது உறவுகள் தொடர்பில் அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்களின் கருத்துக்களை கேட்டு அங்கு கருத்து தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

நீங்கள் கூறிய கருத்துக்கள் மிகவும் பயனுடையவை வெறுமனே காணாமல்போனோர என்று கூறாது இந்த இடத்தில் கண்டோம் அந்த இடத்தில் கண்டோம் என ஆதாரபூர்வமாக கூறும் கருத்துக்கள் விசாரணைக்கு பயனுடையதாக அமையும். இவற்றை எழுத்து மூலம் தாருங்கள் அதை பயனுள்ளதாக்குவோம்.

எனினும் தொடர்ந்து ஒரு விடயத்தை நீங்கள் மறக்கக்கூடாது தூங்கிகொண்டிருக்கிறவனை எழுப்பலாம்.

பாசாங்கு செய்யிறவனை எழுப்பமுடியாது, எங்களுக்கு அது செய்யிறம்.

இது செய்யிறம் என்று கூறும் அரசு உண்மையிலேயே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணையை மேற்கொண்டால் எமக்கு பிரச்சினையில்லை.

ஆனால் நடத்த போகிறோம் நடத்தவுள்ளோம் என்று நடத்தாமலிருக்க காரணம் குற்றமிழைத்தவர்கள் எங்கட ஆக்கள் அவர்களை எவ்வாறு காட்டிக்கொடுப்பது என்பதே அங்குள்ள பல அரசியல்வாதிகளின் நிலை ஆனால் பலமான நெருக்குதல்களால் இந் நிலைமையை மாற்றியமைக்க செய்யமுடியும். அதனைத்தான் இப்போது செய்து வருகிறோம் இது இலகுவான விடயமல்ல. ஏனெனில் நாங்கள் பிடித்தோம், கொன்றோம் அல்லது இந்த இடத்தில் வைத்திருக்கிறோம் என்று கூறினால் அது பாரதூரமான குற்றம் என அவர்களுக்குத் தெரியும். இதனாலேயே இழுத்தடிக்கின்றனர் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். (செ-281)

## 74 இலங்.அகதிகள்...

இதனடிப்படையில், 20 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை, 16 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அடங்கிய மற்றுமொரு குழுவினர் எதிர்வரும் 28ஆம் திகதியும் நாடு திரும்பவுள்ளனர். இந்தியாவில் உள்ள அகதிகள் முகாம்களில் பல வருடங்களாக காலம் கழித்து வந்த இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பவுள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கையர்களுக்கான விமானப் பயணச்சீட்டு மற்றும் உணவு ஆகிய செலவுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வெடிகுண்டு...

ந்தார்.

குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸார் அங்கு பாதுகாப்பினை ஏற்படுத்திவிட்டு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்து யாழ். விசேட அதிரடிப் பொலிஸார் மூலம் அப்புறப்படுத்தி குண்டினை செயலிழக்கச் செய்ய அனுமதி வழங்குமாறு கோரியிருந்தனர்.

நீதிமன்ற பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை அறிக்கையினைப் பார்வையிட்டு அனுமதி வழங்கியதையடுத்து விசேட அதிரடிப் பொலிஸார் குண்டினை மீட்டு செயலிழப்பு செய்வதற்காக பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் பாதிப்பை...

தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வெப்பமான கால நிலை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

வெப்ப நிலையானது அதிகரிக்கும் போது பற்றீரியா பெருக்கமும், வைரஸ் பெருக்கமும் காணப்படும். அத்துடன் இக் காலப்பகுதியில் சுவாசம் தொடர்புபட்ட நோய்கள் அஸ்துமா நோய்கள் மற்றும் தூசுகளால் கண்நோய்களும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு.

எனவே முடியுமானளவு பகல் 11 மணியளவில் இருந்து பிற்பகல் 3மணிவரை வெயில் சூழலில் செல்வதை தவிர்ப்பதன் மூலம் இவற்றை கட்டுப்படுத்தலாம்.

இக் காலப் பகுதியில் வயது முதிர்ந்தவர்கள் சில்வேளைகளில் அதிகரித்த வெப்ப பாதிப்பால் உயிரிழக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. குறிப்பாக 75வயது தொடக்கம் 80 வயதுக்குட்பட்ட வயதானவர்களுக்கு இந்த பிரச்சினை ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது. எனினும் வெப்பத்தால் இறக்கின்ற நிலைமை இந்தியாவிலேயே அதிகமாக காணப்படுகின்றது.

மேலும் வெப்பத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு நாளொன்றுக்கு சராசரியாக ஒருவர் 3 லீற்றருக்கு அதிகமான நீரை அருந்த வேண்டும். இவற்றைவிட நீராகாரம் நிறைந்த உணவு வகைகளை உட்கொள்வதனூடாகவும் குறிப்பாக பழவகைகள், கூழ், கஞ்சி, மரக்கறிகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதனூடாக இவ் வெப்பத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என மருத்துவர் ஜமுனாநந்தா மேலும் தெரிவித்தார். (செ-4)

## வனவளத் திணைக்களம் மீது...



படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்களின் காணி விடுவிப்பு கூட்டத்தின் பின்னர் கிளிநொச்சி வனவளத்திணைக்கள அதிகாரிக்கும் மாவட்ட அரச அதிபருக்கும் இடையில் சிறு வாக்குவாதமும் இடம்பெற்றது.

'அரச காணிகள் அனைத்தும் தங்களுடைய வனவளத் திணைக்களத்திற்குரிய காணி என்றும் அதில் எந்த பணிகளை மேற்கொள்வதாக இருந்தாலும் தங்களின் அனுமதியை பெறவேண்டும் என்பதோடு, தங்களின் நடைமுறைக்கு அமைவாகவே செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வனவளத் திணைக்கள அதிகாரி கூறியிருந்தார்.

ஆனால் 1992 ஆம் ஆண்டு 58 இலக்கத்துவ உரிமம் மாற்றம் சட்டத்திற்கு அமைவாக அரச காணிக்கான அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எனினும் அதன்படி செயற்பாடுக்களை முன்னெடுக்கின்ற போது வனவளத் திணைக்களம் தடையாக இருக்கிறது என அரச அதிபரால் குற்றம் சாட்டப்பட்டது

இதற்கு வனவளத் திணைக்களத்தின் மாவட்ட பொறுப்பதிகாரி 5/2001 சுற்று நிருபத்திற்கு அமைவாக அனைத்து அரச காடுகளும் மற்றும் எதிர்காலத்தில் வனமாக மாறக்கூடிய நிலங்களும் வனவளத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே அதன்படியே நாங்கள் செயற்படுகின்றோம். 2009 வன திருத்தப்பட்ட சட்டத்தின்படி காடு என்பது தனியே மரங்களை கொண்ட பிரதேசங்கள் மட்டுமல்ல. காடு என்பதற்கு அச் சட்டத்தில் தனியான வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே நாங்களும் எங்களது சட்டத் திட்டங்களுக்கு அமைவாகவே பணிகளை மேற்கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்

இந்த நிலையில் குறித்த அதிகாரி மீது சட்டரீதியாக நீதிமன்றத்தை நாடி நடவடிக்கைகளை எடுக்க முடியும் என கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாவட்ட அரச அதிபரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-312)

## 6 கிலோ கஞ்...

கிளிநொச்சி பளை பொலிஸாரால் 6 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கடற்படையினர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது குறித்த 6 கிலோ கேரளா கஞ்சாவும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், மற்றுமொருவர் தப்பி சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் நீதிமன்ற அனுமதியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசத்திலிருந்து வடமராட்சி கிழக்கு பகுதிக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய முற்பட்ட போதே பொலிஸார் கஞ்சாவை கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-15)

## பண்டாரவன்னி...

யாற்றுகையில்.

பண்டாரவன்னியனின் வரலாறு எம் அனைவருக்கும் புத்துணர்வையும் நம்பிக்கையையுந் தரவல்லது. நேர் சிந்தனையுடன் நிமிர்ந்து நடந்து வாழ்க்கையை எதிர்கொண்ட மாவீரன் அவன். அவனின் வாழ்க்கை உத்தியோகபூர்வமாக எழுதப்பட வேண்டும் என்று கோரிக்கைவிடப்பட்டது.

சரித்திர ஆசிரியர்களையும் வன்னி பற்றிய அறிவு படைத்த அறிவாளிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து சகல செய்தித்தரவுகளையும் அறிந்த பின் ஒரு நூலினை வெளியிடலாம் என்று நினைக்கின்றேன்.

பத்திரிகையில் வேண்டுமெனில் அறிக்கை விடுத்து தகவல்கள் அறிந்தவர்கள் அவற்றை அந்த குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கோரலாம். இவற்றிற்கான செலவை எமது பண்பாட்டலுவல்கள் அமைச்சர் எமக்குத் தந்துதவுவார் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9-281)

## வாகனம் மோதி...

மோதுண்ட 11/2 வயது ஆண் குழந்தை ஒன்று நேற்றைய தினம் மாலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

நிந்தவூர் 6-ம் பிரிவைச் சேர்ந்த ஒன்றரை வயதுடைய அஜ்மல் ஹம்தான் எனும் குழந்தையே பேக்கரி வண்டியில் மோதுண்டு நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளது.

நேற்று மாலை குழந்தையின் தாய் பேக்கரி வண்டியில் உற்பத்திப் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்த போது குழந்தை வண்டிக்கு முன் சென்று நின்றுள்ளது. அதை அவதானிக்காது பேக்கரி வண்டி சாரதி வண்டியை முன் நகர்த்திய போதே இப் பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-9)


**ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

ஒரு வார, ஒருநாள் ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**077 245 3673** (8778)

**விற்பனைக்கு**

கலப்பற்ற ஊர்க்கோழிக்குஞ்சுகள் - ரூ.65/=
கிரிராஜா ஊர்க்கோழிகள் (முட்டை இடுபவை) - ரூ. 1200/=
நியூபேணாட் (NEW BERNARD) புறொயிலர் குஞ்சுகள்
முட்டைக்குஞ்சுகள் சிவப்பு/ வெள்ளை
முற்பதிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**076 630 0799** (8779)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (சி-8123)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

**070 330 5500**

அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா (சி-8215)

**வீடு விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, கோப்பாயில், சுற்றிவர மதில் அமைக்கப்பட்ட 2 பரப்புடன் கூடிய வீடு (3 Room) விற்பனைக்குண்டு. (Point Pedro Road இற்கு அருகாமையில் காணப்படுகிறது)
தரகர் தேவை இல்லை.

**077 401 3062**
**076 707 9792** (8780)

**பிரகபி கிராபிக் டிசைனர்ஸ்**

**Photoshop Designer தேவை**

அடிப்படைச் சம்பளம் **18,000/=**
(நிபந்தனைக்குட்பட்டது)
(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
127/11, யுபிலி பஜார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.பஸ் தரிப்பிடத்துக்கு பின்புறமாக)

**T.P: 021 222 7776, 071 793 9246**

**அறிவித்தல்**

Hospital Regd. No. WA.42756

**மருத்துவத்தின் அற்புதங்கள்**

இது ஓர் ஆங்கில மருத்துவமோ ஆயுர்வேதமோ இல்லை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். இது ஹோமியோபதியில் மாத்திரமே முடியும்.
நீரிழிவு நோய் உட்பட அஸ்துமா, மூட்டுவாதம், பாரிசவாதம், குழந்தை மருத்துவம் போன்றவைகளுக்கு நிரந்தர தீர்வு காண முடியும். மாத்தளை I.A.S Hospital ஸ்தாபனத்தவர்கள் தற்சமயம் தங்களின் நடமாடும் சேவையை செவ்வாய்க்கிழமைகளில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கோவில் மண்டபத்திலும் 22.04.2017 ஆம் திகதி முதல் மாதம் இரு சனிக்கிழமைகளில் புகையிரத நிலைய வீதி, திருநகர், கிளிநொச்சியிலும் (கண்ணிவெடி பிரிவுக்கு முன்பாக) மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர்.
முன்பதிவுகளுக்கு :-
வவுனியா : 077 444 1082 - கிளிநொச்சி : 077 825 5696

PROF, DR.A.C.CANAGARAJA
M.D (Hom) F.R.C.P (M.A)
Phd (Cey)

DR.A.C.YOHULARAJAH
M.D (M.A) M.B.H.S
D.AC. Dip in Aur

**Head Office**
53/2/1, Seevali Mawatha
Thotagamuwa, Matale.
Tel : 077 908 8991
(8781)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

தென்கிழக்கு பல்கலைக்கழக வெளிவாரி நுழைவுப் பரீட்சை
சனி,ஞாயிறு - 1.00 - 5.00
பல்கலைக்கழக விசேட கற்கை தெரிவுகள்
சனி,ஞாயிறு - 2.00 - 5.00
சட்டமாணி நுழைவு
சனி-12.00 - 4.00
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி-10.00 - 2.00
SLAS
பிரிவு - I
சனி,ஞாயிறு - 9.00 - 3.30
பிரிவு - II
ஞாயிறு - 9.00 - 4.00
பிரிவு - III
திங்கள் தொடக்கம் வியாழன் வரை பி.ப 5.00 - 7.00 மணிவரை
முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு - I
ஞாயிறு - 11.30 - 3.00
பிரிவு - II
ஞாயிறு - 1.00 - 4.30
பிரிவு - III
செவ்வாய், புதன் பி.ப 4.30 - 6.00
தொடர்புகளுக்கு: 076 688 3394, 021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு யாழ்.நகர்.


கவிஞர் கலாபூஷணம்
**புத்தூர் வே.இளையகுட்டி கவிதைகள் நூல் வெளியீடும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்குமான அழைப்பு**



காலம் :
23.04.2017 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி
இடம் :
சிவசக்தி மணிமண்டபம், ஆவரங்கால்.

**நிகழ்வின் நிரல்**

*நினைவுச் சுடரேற்றல்*
*மலரஞ்சலி*
*இறைவணக்கம்*
*நூல் வெளியீடு*
*வரவேற்புரை*
**கௌரவ அ.பரஞ்சோதி**
(வட மாகாணசபை உறுப்பினர்)
*தலைமையுரை*
செந்தமிழ்ச் சொல்லருவி **ச.லலீசன்**
(பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
*நினைவுரை*
**திருமதி கௌரி முகுந்தன்**
(வட மாகாண தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்)
*வெளியீட்டுரை*
கவிஞர் **த.ஜெயசீலன்**
(பிரதேச செயலர், பருத்தித்துறை)
*நயப்புரை*
கலாநிதி **செ.திருநாவுக்கரசு**
(ஓய்வுநிலை பிரதி அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
*ஏற்புரையும் நன்றியுரையும்*
**திரு.இ.நிர்மலன்**
*மதிய போசனம்*

குறிப்பு: இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக பெருமனதோடு ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.
(சி-8217) - குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org